இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 77 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 09 – வியாழக்கிழமை 26 அக்டோபர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 77: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 09 - Thursday 26 October 2023 - Kovai ★★ 12 Pages ₹5.00

## நஞ்சு தோய்ந்த எண்ணங்கொண்டோரின் பின்னணியை காந்தியாரின் இறுதி நாட்கள் சொல்லும்!

# ‘நடிப்புச் சுதேசி’களை நாடறியும்!

## மானமறவர் மருதிருவரின் 222-வது நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்தி!

**சென்னை, அக். 26 -**

**மான மறவர் மருதிருவரின் 222-வது நினைவுநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில், “நஞ்சு தோய்ந்த எண்ணங்கொண்டோரின் பின்னணியை காந்தியாரின் இறுதி நாட்கள் சொல்லும்” என்றும், “நடிப்புச் சுதேசிகளை நாடறியும்” என்றும் கூறியுள்ளார்.**



சிவகங்கையை ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். இவர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக முதலில் குரல் கொடுத்து ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடியவர்கள். இதற்காக ஆங்கிலேயர்களால் 221 ஆண்டுகளுக்கு முன்பாக இதே நாளில் அக்டோபர் 24ஆம் தேதி தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களுக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதி நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் சார்பில் அமைச்சர்கள் மருதுபாண்டியர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மருது பாண்டியர்களுக்கு நேற்று முன்தினம் 222-வது நினைவு தினமாகும்.

இதுகுறித்து மருதுபாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**தமிழ் நிலத்தின் உரிமைகளைக் காக்கத் தங்கள் உயிரையும் துச்சமென நினைத்த மான மறவர் மருதிருவரின் புகழ் ஓங்குக!**

**★ சின்ன மருதும், பெரிய மருதும் பீரங்கிகளுக்கு முன்னால் வளரியால் வாகை சூடியவர்கள். இவர்கள் வைத்திருந்த வளரிக்கு முன்னால் பீரங்கிகள் சரியும் என்று எழுதினான் பிரிட்டிஷ் அதிகாரி கர்னல் வெல்ஷ்! இது 1801ஆம் ஆண்டு!**

**★ கழக அரசு அமைந்ததும் மருது சகோதரர்கள் சிலையைச் சென்னையில் அமைக்க 34 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.**



**கலைஞர் கைவண்ணத்தில் ‘தென்பாண்டிச் சிங்கம்’ எனக் கலை வடிவம் பெற்று, வாளுக்குவேலி வழியாகக் காலத்தால் அழியாத காவியமாக அவர்களது கதை நிலைத்திருக்கிறது.**

**தி.மு.கழக அரசு அமையும் போதெல்லாம் விடுதலை வீரர்களின் புகழ் திக்கெட்டும் போற்றப்படுகிறது.**

**நஞ்சு தோய்ந்த எண்ணங்களோடு நயமாகப் பேசும் திடீர் குபீர் நாட்டுப்பற்றாளர்களின் வரலாற்றைத் தேசத் தந்தை காந்தியாரின் இறுதி நாட்கள் சொல்லும்!**

**இந்தக் கோட்சே கூட்டத்தைத் தான் மகாகவி பாரதியார் ‘நடிப்புச் சுதேசிகள்’ எனப் பாடினார்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் போற்றிய இயக்கம் தி.மு.க.! வரலாறு தெரியாமல்

# ஆளுநர் ரவி பச்சைப் பொய்களைப் பரப்புவதா?

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கடும் கண்டனம்!

**சென்னை, அக். 26 -**

**“விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் போற்றிப் பாராட்டுவதில் யாருக்கும் சளைத்தது அல்ல கழக அரசு! மக்கள் வரிப் பணத்தில் ஊர் சுற்றும் ஆளுநர் ரவி வரலாறு தெரியாமல் பச்சைப் பொய்களை பரப்புவதா?” என்று கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிறைந்த தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றிய நீட் விலக்குச் சட்டமுன்வடிவு உள்ளிட்ட பல மசோதாக்கள் ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறது.

அந்தச் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள், தன் பொறுப்பை நிறைவேற்றாமல், மக்கள் வரிப்பணத்தில் ஊர் ஊராகச் சுற்றி, நிகழ்ச்சிகளை நடத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகவும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுக்கு எதிராகவும் தொடர்ந்து பேசி வருவது, அரசியல் சாசனத்திற்கு அவர் செய்கின்ற துரோகம்!

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊதுகுழல் ஆளுநர் ரவி!**

ஆளுநர் பொறுப்பேற்பவர்கள் அரசியல்வாதி போல செயல்படவோ பரப்புரைச் செய்யவோ மாட்டார்கள். அந்த மரபுக்கு மாறாக, அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதியாக, ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊதுகுழலாக ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் செயல்படுவதோடு, தமிழ்நாட்டின் பண்பாடு, வரலாறு, நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் உயர்வு இவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து உளறிக் கொண்டிருக்கிறார்.



தமிழ்நாடு என்று சொல்லாதீர்கள், தமிழகம் என்றுதான் சொல்ல வேண்டும் என்று உளறினார். சமஸ்கிருதத்தை முன்வைத்து தமிழைப் பின் தள்ளினார். வேதங்களைப் பார்த்து திருக்குறள் எழுதப்பட்டதாகச் சொன்னார். எவ்வித ஆதாரமுமின்றி இப்படி பச்சைப் பொய்களைச் சொல்வதுடன், திராவிடம் என்ற கருத்தியல் பற்றி அவர் உளறிக் கொட்டுவது ஒவ்வொரு மேடையிலும் வழக்கமாக இருக்கிறது.

வெள்ளையரை எதிர்த்து வீரப் போர் புரிந்து, உயிரைத் துச்சமென நினைத்து, மரணத்தை முத்தமிட்ட மாவீரர்கள் மருது சகோதரர்களின் தியாகத்தை தமிழ்நாடு அரசு போற்றிவரும் நிலையில், மருதிருவர் விழா ஒன்றில் பங்கேற்ற ஆளுநர் ரவி பச்சைப் பொய்களை கொட்டி கடை விரித்திருக்கிறார். தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டத் தியாகிகளின் வரலாற்றைத் தேடிப் பார்த்தாராம். அவருக்கு எதுவுமே கிடைக்கவில்லையாம். தமிழ்நாடு அரசு தியாகிகளை மறந்து விட்டதாம். பா.ஜ.க. தலைவர்கள் எப்படி அன்றாடம் பொய் பேசி, வதந்தி பரப்புகிறார்களோ, அவர்களுக்குப் போட்டியாக, தமிழ்நாட்டின் பா.ஜ.க. தலைவராக வேண்டும் என்ற ஆசையில் ஆளுநரும் பொய்யாகவே பேசுகிறார்.

**ஆளுநர் தனது திருவாயை திறக்காதது ஏன்?**

பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலு நாச்சியார், வீரன் அழகு முத்துக்கோன், தீரன் சின்னமலை, மகாகவி பாரதியார், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., திருப்பூர் குமரன் போன்ற எண்ணற்ற தியாகிகளை என்றென்றும் மதித்துப் போற்றுகின்ற அரசாகத் தமிழ்நாடு அரசு திகழ்ந்து வருகிறது. மருதுபாண்டியர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாற்றை சித்தரிக்கும் ஊர்திகளை டெல்லி குடியரசு தின விழா அணிவகுப்பில் சேர்க்க முடியாது என மறுத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு திருப்பி அனுப்பிய போது இந்த ஆளுநர் ரவி எங்கே போனார்? அந்த ஊர்திகளை எல்லாம் தமிழ்நாடு முழுவதும் பயணிக்க வைத்து ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் ஓரணியில் நின்று அந்த ஊர்திகளை வரவேற்ற காட்சி ஆளுநர் மாளிகையில் அமர்ந்திருந்த திரு ரவி மறந்து விட்டாரா? அலுவலகத்தில் தேசியக் கொடியையே ஏற்றாமல் இருந்த ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகராக பவனி வரும் ரவி தனது திருவாயை ஏன் அப்போது திறக்கவில்லை?

**விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் உயர்வு!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது, இந்திய விடுதலையின் வெள்ளிவிழா ஆண்டில் விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழ்நாட்டுத் தலைவர்களில் அன்றைக்கு உயிருடன் இருந்த மூத்த தலைவர்களின் வீடு தேடிச் சென்று

**தொடர்ச்சி 4ஆம் பக்கம்**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 26-10-2023

# பட்டினியை உருவாக்கிய பா.ஜ.க.

“நாட்டில் வறுமை ஒழியும் வரை ஓயமாட்டோம்” என்று வாயால் வடை சுட்டுள்ளார் பிரதமர் நரேந்திரமோடி. மத்தியப்பிரதேச மாநிலத்தில் அடுத்த மாதம் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. அதனால் அந்த மாநிலத்தில் பள்ளி ஆண்டு விழாவில் எல்லாம் பிரதமர் கலந்து கொள்கிறார். குவாலியர் நகரில் உள்ள ஒரு பள்ளியில் இரண்டு நாட்களுக்கு முன்னால் பேசி இருக்கிறார் பிரதமர்.

“பாரதத்தில் இருந்து வறுமையை ஒழிப்பது இன்றியமையாதது. அந்த நேசத்துக்குரிய இலக்கை அடையும் வரை நாங்கள் ஓய மாட்டோம்” என்று அந்தப் பள்ளி விழாவில் பேசி இருக்கிறார் பிரதமர்.

**2014 ஆம் ஆண்டு பிரதமர் ஆனதும் பேசி இருக்க வேண்டியதை, 2023 இல் பிரதமர் நாற்காலியில் இருந்து இறங்கப் போகும் போது சொல்லி இருக்கிறார்.**

**இந்த ஒன்பது ஆண்டு காலம் இந்திய நாட்டின் பிரதமராக இருந்தவர் அவர் தான். பட்டினியை ஒழிக்க என்ன செய்தார்? இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்து அந்த இரண்டாவது முறையும் முடியப் போகும் போது, பட்டினிக்கு எதிராகப் பேசி இருக்கிறார் பிரதமர்.**

சில நாட்களுக்கு முன்பு தான் ஒரு புள்ளிவிபரம் வெளியானது. கடந்த ஒன்பது ஆண்டு கால மோடி ஆட்சியில் இந்தியாவில் பட்டினி அதிகரித்துள்ளது என்பது அந்த புள்ளிவிபரம் ஆகும். உலகப் பட்டினி குறிப்பீட்டில் (Global Hunger Index) இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு மிக மோசமான இடத்தை அடைந்துள்ளது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 125 நாடுகளில் 111 ஆவது இடத்தை பெற்றுள்ளது மோடியின் இந்தியா.

‘இந்தியா’ என்று சொன்னால் அவர்களுக்கு பிடிக்காது. அதனால் மாற்றிச் சொல்லுவோம்... ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 125 நாடுகளில் 111 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது மோடியின் பாரதம். 125 நாடுகளில் 28.7 என்ற புள்ளிகளை மட்டுமே மோடியின் பாரதம் பெற்றுள்ளது.

அரசியலில் மிக மோசமான நிலையில் உள்ள நாடுகளான பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் ஆகிய நாடுகள் எல்லாம் இந்தியாவை விட நன்றாக இருக்கின்றன. பாகிஸ்தான் 102 ஆவது இடத்திலும், வங்கதேசம் 81 ஆவது இடத்திலும், நேபாளம் 69 ஆவது இடத்திலும், இலங்கை 60 ஆவது இடத்திலும் இருக்கிறது. மோடியின் பாரதம், 111 ஆவது இடத்தில் இருக்கிறது.

இவை ஏதோ காலம் காலமாக இருக்கும் நிலைமை அல்ல. மோடியின் ஆட்சிக்குப் பிறகுதான் நிலைமை மோசம் ஆகி இருக்கிறது.

**2011 ஆம் ஆண்டு 122 நாடுகளில் இந்தியா 67 ஆவது இடம்**

**2012 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 65 ஆவது இடம்**

**2013 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 63 ஆவது இடம்**

**2014 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 55 ஆவது இடம் என இந்தியாவில் பட்டினிக் குறியீடு இருந்தது. 2014 ஆம் ஆண்டு மோடி, இந்தியாவின் பிரதமராகிறார். அதன்பிறகு என்ன ஆனது பாருங்கள்...**

**2015 ஆம் ஆண்டு 117 நாடுகளில் 80 ஆவது இடம்**

**2016 ஆம் ஆண்டு 118 நாடுகளில் 97 ஆவது இடம்**

**2017 ஆம் ஆண்டு 119 நாடுகளில் 100 ஆவது இடம்**

**2018 ஆம் ஆண்டு 132 நாடுகளில் 103 ஆவது இடம்**

**2019 ஆம் ஆண்டு 117 நாடுகளில் 102 ஆவது இடம்**

**2020 ஆம் ஆண்டு 107 நாடுகளில் 94 ஆவது இடம்**

**2021 ஆம் ஆண்டு 116 நாடுகளில் 101 ஆவது இடம்**

**2022 ஆம் ஆண்டு 121 நாடுகளில் 107 ஆவது இடம்**

**2023 ஆம் ஆண்டு 125 நாடுகளில் 111 ஆவது இடம் என இந்தியாவின் பட்டினிக் குறிப்பீட்டில் மோடியின் பாரதம் சரிந்து கொண்டே வந்துவிட்டது.**

குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை வைத்து இதனைக் கணக்கீடு செய்கிறார்கள். இந்தியாவில் 22 கோடிப் பேர் வறுமை நிலையில் இருப்பதாக ஐ.நா. அறிக்கை கடந்த ஆண்டு கூறியது. பீகார், ஜார்கண்ட், மேகாலயா, மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், அசாம், ஒடிசா, சத்தீஸ்கர், அருணாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வறுமையும் ஏழ்மையும் அதிகமாக உள்ளது.

**சமீபத்திய அறிக்கைகளின்படி, இந்தியாவின் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தொகையில் கால் பகுதிக்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். இந்தியாவின் கிராமப்புறங்களில் வாழும் மொத்த மக்கள்தொகையில், 25.7% பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர், நகர்ப்புறங்களில், 13.7% மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்.**

இவை அனைத்தையும் மறைத்து கடந்த ஆண்டு ஒன்றிய நிதி ஆயோக் ஒரு அறிக்கையை கொடுத்தது. ‘வறுமை இல்லாத நாடாக 2022ஆம் ஆண்டு இந்தியா உருவாகும்” என நிதி ஆயோக் அறிக்கை நம்பிக்கை தெரிவித்தது. அரசுக்கு ஆலோசனை கூறும் உயர் அமைப்பான நிதி ஆயோக், ‘2022ஆம் ஆண்டில் இந்தியா’ என்ற தலைப்பிடப்பட்ட அந்தத் தொலைநோக்கு அறிக்கையில், ‘உலகின் முன்னணிப் பொருளாதார நாடாக இந்தியா வளரும்; இந்தியாவில் நிலவும் வறுமை 2022ஆம் ஆண்டுக்குள் முற்றிலும் ஒழியும்; அதேபோல, 2022ஆம் ஆண்டுக்குள் ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத இந்தியாவாக மாறும்’ என அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. ‘சர்க்கரை’ என்று எழுதினால் அந்த தாள் இனிக்குமா?

**ஆனால் உண்மையான நிலைமை என்ன என்பது இப்போது அம்பலமாகி விட்டது. கார்பரேட் கம்பெனிகளுக்கு பல லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்வதும், கோடிக்கணக்கான மக்களுக்கு வறுமையைப் பரிசளிப்பதும் தான் மோடியின் பாரதம்.**

●●



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2023) சென்னையில் நடைபெற்ற வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் மகள் டாக்டர் எம்.ஆர்.கே.பி.கண்மணி – டாக்டர் கே. சித்தார்த் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் உள்ளிட்ட கட்சி தலைவர்கள், மக்கள் நீதி மையத்தின் தலைவர் கமல்ஹாசன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## நாகர்கோவில் முக்கூடல் அணை முழு கொள்ளளவை எட்டியது!

கன்னியாகுமரி, அக்.26-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் முக்கூடல் அணை நான்கு ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை 24.10.2023, செவ்வாய்க்கிழமை எட்டி உள்ளது. இதை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டார். இந்த முக்கூடல் அணையில் இருந்து நாகர்கோவில் மாநகராட்சி பகுதி முழுவதும் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. கடந்த இரண்டு, மூன்று நாள் பெய்த கனமழையின் காரணமாக அணையின் 25 அடி முழு கொள்ளளவையும் எட்டியுள்ளதால் மாநகரத்தில் குடிநீர் தட்டுப்பாடின்றி விநியோகிக்க முடியும். ஏற்கனவே மைனஸ் டிகிரி அளவில் இந்த அணை இருக்கும்போது புத்தன் அணையில் இருந்து கொண்டுவந்த குடிநீரை வைத்து மக்களுக்கு வினியோகிக்கப் பட்டது. இதனால் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் இருந்தது. இனி மூன்று நாளைக்கு ஒருமுறை தண்ணீர் வினியோகிக்க முடியும். தற்போது நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் இல்லங்கள் தோறும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இது முறையாக நிறைவு பெற்ற பின்பு தனி நபருக்கு 135 லிட்டர் தண்ணீர் என்ற கணக்கில் தினமும் குடிநீர் வினியோகம் செய்யப்படும்.

### சுதந்திரப் போராட்ட வீரர்களை மதிக்கும் இயக்கம் தி.மு.க!

## ஆளுநர் வரலாறு தெரியாமல் பேசுவதா?

### மருது பாண்டியர்கள் சிலைக்கு மாலை அணிவித்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை,அக். 26-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் 222வது நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமைச்சர்கே.ஆர்.பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

சிவகங்கையை ஆட்சி புரிந்த மாமன்னர்கள் மருது பாண்டியர்கள். ஆங்கிலேயர்களால் சுதந்திர போராட்டத்திற்காக போராடிய தற்காக தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களது 222 ஆவது நினைவு நாளை முன்னிட்டு முதல்வர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில்அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ராஜ கண்ணப்பன், பி. மூர்த்தி, நான் (பெரியகருப்பன்) ஆகியோர் தமிழக அரசின் சார்பில் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினோம்.தொடர்ந்து அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

சுதந்திர போராட்ட வீரர்களின் வீர தீரத்தினை பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் போற்றி பாராட்டி உள்ளார்கள். அவர்களது வழியில் முதல்வர் தளபதி அவர்கள் என்றும் மதித்து பாராட்டி வருகிறார். முன்னாள் கழக அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் ஆகியோர் மருது பாண்டியர்களின் வரலாறை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில் திருப்பத்தூரில் மருதுபாண்டியர்களுக்கு சிலை வைக்க வேண்டும் என்று முதல்வராக இருந்த கலைஞரிடம் கோரிக்கை வைத்தார்கள். அதை உடனடியாக ஏற்று தலைவர் கலைஞர் அவர்கள் மருது பாண்டியர்களுக்கு சிலை வைத்து மணி மண்டபம் அமைக்க உத்தரவிட்டார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில் சென்னையில் மருது பாண்டியர்களுக்கு சிலை நிறுவினார்.

மதுரையிலும் தலைவர் கலைஞர் மாமன்னர்களுக்கு சிலை வைத்தார். தொடர்ந்து தி.மு.க .அரசு சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்டவர்களை என்றும் மதித்தும் அவர்கள் வீரத்தினை போற்றும் இயக்கமாக இருந்து வருகிறது.

இத்தகைய வரலாறு தெரியாத ஒருவர் தமிழக ஆளுநர் திருச்சியில் யாரோ எழுதிகொடுத்ததை பேசியுள்ளார். அவ்வாறு பேசும் போது வரலாறு தெரிந்து கொண்டு பேசவேண்டும். வரலாறுகளை மூடி மறைக்க முடியாது.

தலைவர் கலைஞர் அவர்கள் தான் சுதந்திர போராட்ட வீரர்களின் வீரத்தையும் தீரத்தையும் போற்றி பாராட்டினார். அவர்களை மதிக்கும் இயக்கம் தி.மு.க. தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் பேட்டியளித்தார்.

தொடர்ந்து ஜாதிவாரி கணக்கெடுப்பு குறித்து பா.ம.க.தலைவர் அன்புமணி ராமதாஸ் மாநில அரசு தொடங்க வேண்டும் என்று கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் இது குறித்து முதல்வர் அவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து பிரதமர் மோடி தான் அறிவிக்க வேண்டும் என்று கூறினார். பேட்டியின்போது அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் மாவட்ட துணைச்செயலாளர் த.சேங்கை மாறன் ஆகியோர் இருந்தார்கள்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

## திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் 222வது நினைவு தினம்!

### அமைச்சர்கள் தங்கம் தென்னரசு - ராஜ கண்ணப்பன் - பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை!

சிவகங்கை, அக். 26-

சிவகங்கையை ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். இவர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக முதலில் குரல் கொடுத்து ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடியவர்கள். இதற்காக ஆங்கிலேயர்களால் 221 ஆண்டுகளுக்கு முன்பாக இதே நாளில் அக்டோபர் 24ஆம் தேதி தூக்கிலிடப்பட்டார்கள். அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24ஆம் தேதி நினைவுதினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் சார்பில் அமைச்சர்கள் மருதுபாண்டியர்கள் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த ஆண்டு 222ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் நேற்று திருப்பத்தூரில் உள்ள மருதுபாண்டியர்கள் சிலைகளுக்கு அமைச்சர்கள் கேஆர்.பெரிய கருப்பன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து திருப்பத்தூர் பஸ் நிலையம் அருகே உள்ள மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்திலும் அமைச்சர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.முத்துதுரை, தா.ராமையா, நகரக் கழகச் செயலாளர்கள் துரைஆனந்த், என்.குணசேகரன், க.பொன்னுச்சாமி பெரி.பாலா, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சண்முகவடிவேலு, விராமதி மாணிக்கம், கே.பாலசுப்பிரமணியன், எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், குன்னக்குடி சுப்ரமணியன், நா.நெடுஞ்செழியன், பூமணி துரை.ராஜாமணி, எம்.அண்ணாதுரை, நாகனி ரவி வே.தமிழ்மாறன், பூபால சிங்கம், சுப.சின்னத்துரை, யோககிருஸ்ணகுமார், பேரூர்க் கழகச் செயலாளர்கள் ஆர்.கார்த்திகேயன், கே.பி.எஸ்.பழனியப்பன், கதிர்வேல், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் திருமதி பூரண சங்கீதா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் என்.எம்.சாக்ளா, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், புதூர் கண்ணன், ராம.ரவி, முத்துக்குமார், ஷாஜகான், உதயம் சண்முகம், அண்ணாமலை சேகர், சோமசுந்தரம், பொருளாளர் ஏ.எம்.கண்ணன், திருநாவுக்கரசு, பேரூராட்சித் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன்சீமான் சுப்பையா, பட்டமங்கலம் பிரவீன், சேவியர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டியன் ஏற்பாட்டின் பேரில் அன்னதானத்தை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா ஆஜித் காலை 8.00 மணிக்கு தேசியக்கொடி ஏற்றி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு வந்தவர்களை மாமன்னர் மருதுபாண்டியர் வாரிசுதாரர் ராமசாமி மற்றும் அவரது குடும்பத்தினர் வரவேற்றார்கள்.

முன்னதாக வாரிசுதாரர்கள் பொங்கல் வைத்து வழிபட்டார்கள்.

நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த் தலைமையில் ஏராளமான போலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (24.10.2023) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், மருது பாண்டியர்கள் நினைவு நாளை முன்னிட்டு அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் அறந்தாங்கியில் நடைபெற்ற பள்ளி மாணவ – மாணவியருக்கான கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டியை புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ஆர்.மேகநாதன், மிசா சி.ராமநாதன், ஞான.இளங்கோவன், அடைக்கலம், க.மதியழகன், ஜெ.அபுதாகீர், க.ராஜேந்திரன், உதயம் சண்முகம், தவ. பாஞ்சாலன், வே.பொன்துரை, சக்தி இராமசாமி. பொன். கணேசன், அ.முத்து, அழகு சிதம்பரம், கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, எஸ்.குமார் (ஏ) துரைக்கண்ணு. ஆர்.கணேசன், கீரமங்கலம் பேரூர் செயலாளர் கே.சி.சிவக்குமார், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், சீனி.பழனியப்பன், வீரய்யா, அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், த.மணிராஜன், தி.முத்து, கே.ஆர். இராமசாமி. எம்.ஜி (ஏ) ராமச்சந்திரன், சர்வேயர் மா.நடசேன், எம்.எம்.பாலு, கலைச்செல்வன், பாத்திமா பீவி, தேவி, கருணாகரன், ஆலங்குடி செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### மேல்மலையனூர் ஒன்றியத்தில்

## ரூ 1.69 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, அக். 26 -

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில் ரூ 1.69 கோடி மதிப்பீட்டில்கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு 11.97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தினையும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் மேல்மலையனூர் ஒன்றியம் செவலபுரை அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ 84.72 லட்சம் மதிப்பீட்டில் நான்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கும், தேவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 84.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வகுப்பறை கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கும் பணிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கணேசன், வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர்கள் இளங்கோவன், அண்ணாமலை ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு செவலபுரை மற்றும் தேவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 1 கோடியே 69 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தலா நான்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கான பணியை தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து வலத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 11.97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன், பொதுப்பணித் துறை உதவி பொறியாளர் பிரவீன் குமார்,ஒன்றிய கவுன்சிலர்கள் காசியம்மாள்கோதண்டம், ரவிச்சந்திரன், பெருமாள், சியாமளா ஜெயசங்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள்செவலபுரை சசிகலா ஜெய்சங்கர்,தேவனூர் சாந்தி சக்திவேல், வளத்தி விஜயலட்சுமி ஜெயக்குமார்,துணைத் தலைவர் கோவிந்தராஜ், பள்ளி ஆய்வாளர் விநாயக மூர்த்தி, ஆவின் இயக்குனர் ஆறுமுகம், அரசு வழக்கறிஞர் சீனிவாசன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம் உள்ளிட்ட ஆசிரியர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் அகரம் காலனி பகுதியில் தீ விபத்து!

### பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு லட்சுமணன் எம்.எல்.ஏ. நிதியுதவி!

விழுப்புரம், அக். 26 -

விழுப்புரம் அருகே வி.அகரம் காலனி பகுதியைச் சேர்ந்தவர் அமுதா, கீதா இவர்களின் குடிசை வீடு மின் கசிவுக்காரணமாக நேற்று முன்தினம் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதில் வீட்டில் இருந்த பொருட்கள், கட்டில் உள்ளிட்ட பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமாகின.

இதனிடையே தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை லட்சுமணன் எம்.எல்.ஏ. சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து அரிசி, காய்கறி, மளிகை பொருட்கள் மற்றும் நிதி உதவி உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும் அரசு தரப்பில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பிரபாகரன், மாவட்டப் பிரதிநிதி ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், கிளைச் செயலாளர்கள் திருமுருகன், கேசவன், மாணவரணி விஜய், கிளை நிர்வாகிகள் சரண்ராஜ், ஆனந்த பாபு, பாண்டியராஜன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், தாசில்தார் யுவராஜ், வருவாய் ஆய்வாளர் கதிர்வேல், கிராம நிர்வாக அலுவலர் சுமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகரம் வீரப்பன் சத்திரம் பகுதி கழகம் மற்றும் நந்தா மருத்துவ கல்லூரி மருத்துவமனை சார்பில் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் மாபெரும் மருத்துவ முகாமினை பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் தலைமையில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்டக் கழக பொருளாளர் ப.க.பழனிசாமி, மாமன்ற உறுப்பினர் சுகந்தி தங்கமணி, மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் விவேக் உள்ளிட்ட வீரப்பன் சத்திரம் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பழனிசாமியின் பொய் பல்லிளித்துவிட்டது!

**“இங்கிவனை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்” - என்ற பாடல் வரிகளைக் கேட்டிருப்பீர்கள்! நமது எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் அளித்துள்ள “அறிவுபூர்வ (?)” பதிலைக் கேட்டவுடன் ‘இங்கிவரை நாம் பெறவே என்ன பாவம் செய்துவிட்டோம்’ என்று விபரம் உள்ள ஒவ்வொரு அ.தி.மு.க. தொண்டரும் கொதித்துக் கொந்தளித்துப் போயிருப்பர்!**

‘கம்பராமாயணத்தை எழுதியவர் சேக்கிழார்’ என்று பேசியபோதுகூட அதனை ஜீரணித்துக் கொண்டு ‘சிலிப் ஆப் தி டங்’ - நா தடுமாற்றத்தில் பேசியிருப்பார் அல்லது அவர் பேசியதை வெட்டி ஒட்டி எதிர்க்கட்சியினர் சதி செய்திருக்கக் கூடும் என்றெல்லாம் சமாதானம் அடைந்திருந்த அ.தி.மு.க. தொண்டர்கள், இப்போது எடப்பாடி பழனிசாமி பத்திரிகையாளர் சந்திப்பில் கூறிய கருத்துகளைக் கேட்டு, பாவம், வாடி வதங்கிப் போய் நிற்கிறார்கள்.

**எடப்பாடி பழனிச்சாமியிடம் ஆளுநர் ரவி குறிப்பிட்ட ‘ஆரிய - திராவிடப் பிரச்சினை’ குறித்து செய்தியாளர் ஒருவர் ‘தமிழ்நாட்டில் ஆரியமும் இல்லை; திராவிடமும் இல்லை - என்று ஆளுநர் ரவி கூறியிருக்கிறாரே’ என்று கேட்ட போது,**

**‘இதையெல்லாம் பற்றிக் கூற புராணம் படிக்கணும்; நான் அந்த அளவுக்குப் படிச்சவனில்லை; இந்தக் கதை எல்லாம் படிச்சுச் சொல்லணும்னா பெரியதொரு ஆய்வு பண்ணனும்; ஆய்வு பண்ணினாதான் இதெல்லாம் உண்மையா? பொய்யான்னு தெரியும்; அதுக்கு நான் உட்பட்டவனல்ல”;**

**–என்றுஎடப்பாடிபழனிசாமிகுறிப்பிட்டுத் தனக்குப் புராண அறிவும் கிடையாது; வரலாற்று அறிவும் கிடையாது என்பதைத் தனது பதில் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்!**

அதைவிட அடுத்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு அவர் தந்த பதில், தன்னைத் தானே; தான் ‘ஒன்றும் தெரியாத கூமுட்டை’ என்பதை அவரே வெளிப்படுத்திக் கொள்வதாக அமைந்தது தான்!

ஆரியம் குறித்து ஆளுநர் கூறியது பற்றி செய்தியாளர் கேட்டபோது, ‘அது பற்றி அவரை (ஆளுநரை)த்தான் கேட்கணும்; அவரைக் கேட்க வேண்டிய கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்டால் எனக்கு என்ன தெரியும்?’ - என்று கூறியதோடு விடாமல், (இந்தக் கேள்வியை) அறிஞர்களைப் பார்த்துக் கேட்டால் தான் அது சரியா தப்பான்னு தெரியும் என்று கூறி, தனது அறிவின் அளவை அவரை அறியாமலே வெளிப்படுத்திக் கொண்டுள்ளதைப் பார்த்து, அவரது அருகில் இருந்த செம்மலை உட்பட பலர், வேதனையை வெளிக்காட்டாமல் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்த காட்சியையும் ‘வீடியோ’ பதிவு வெளிப் படுத்திக்கொண்டிருந்தது!



**இதையெல்லாம் பார்க்கும்போது, பா.ஜ.க. வையோ, அதன் பிரதிநிதியாகச் செயல்படும் ஆளுநரையோ எதிர்த்து வாய்திறக்க எடப்பாடி பழனிச்சாமி திணறுவதையும், நிருபர் கேட்ட கேள்விக்கு ‘தத்துபித்து’ என்று பதில் சொல்லி, மன்னிக்கவும் - உளறிக்கொட்டிடுவதிலிருந்தே, எடப்பாடி பழனிச்சாமி நடத்தும் ‘பா.ஜ.க. எதிர்ப்பு’ என்பது ‘திட்டமிடப்பட்ட நாடகம்’ என்பது தெளிவாகவில்லையா?**

கட்சியின் பெயரோ; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்! ஆனால் அதன் தலைவரோ திராவிடம் பற்றி ஆராய்ச்சி செய்யுமளவு அதிகம் படித்தவனில்லை என்கிறார்!

புராணத்துக்கும், வரலாற்றுக்கும் உள்ள வித்தியாசம் கூட தெரியாதவராக தன்னைத் தானே வருணித்துக் கொள்கிறார்!

**‘அறிஞர்களைப் பார்த்துக் கேட்கும் கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்கிறீர்களே’ என்று தனது அறிவிலித்தனத்தை அம்பலப்படுத்திக் கொள்கிறார்!**

**இதை எல்லாம் காணும்போது, எடப்பாடி பழனிச்சாமியை கட்சித் தலைவராக ஏற்றுக்கொண்டு அரசியல் நடத்த நினைக்கும் அ.தி.மு.க.வின் சில அறிவு சார்ந்த நமது பழைய நண்பர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்!**

பழனிச்சாமியின் ‘பாரதிய ஜனதா எதிர்ப்பு’ என்பது, ‘கூட்டணி முறிவு’ எனக் கூறுவதும் கழகத் தலைவர் தளபதி குறிப்பிட்டபடி , **‘அது ஒரு மிகப் பெரிய நாடகம்; நரித்தனத்தின் அடையாளம்!’**

ஆம்; ‘கெட்டிக்காரன் புளுகுக்கே எட்டு நாள்’ என்பார்கள். எடப்பாடி பழனிச்சாமி போன்ற போர்வழிகளின் புளுகுக்கு அத்தனை நாள் தேவையில்லை; ஓரிரு நாளிலேயே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது!

**கழகத் தலைவர் தளபதி குறிப்பிட்டபடி ‘பச்சைப் பொய்யர்’ பழனிச்சாமி தன்னை செய்தியாளர்களிடம் அடையாளம் காட்டிக் கொண்டுவிட்டார். பச்சைப் பாம்பை பச்சைக் கொடியாக எண்ணியிருக்கும் சில பரிதாபத்துக்குரிய அ.தி.மு.க.வின் உண்மைத் தொண்டர்கள் தெளிவு பெறுவார்களாக!**

**பொய்க்கால் குதிரையை நம்பி போர்க்களத்தை எதிர்கொள்ள நினைக்கும் அ.தி.மு.க.வின் உண்மைத் தொண்டர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்!**

சிலந்தி

# ஆளுநர் மாளிகையே.... அடக்கிடு வாயை!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கடும் கண்டனம்... முதல் பக்கத் தொடர்ச்சி

அவர்களுக்கு தாமிரப் பட்டயத்தை வழங்கினார் கலைஞர். தமிழ்நாடு முழுவதும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு மதிப்பூதியம் (பென்ஷன்) வழங்கப்பட்டது. தற்போது அந்த மதிப்பூதியம் மாதம் 20 ஆயிரமாக உயர்த்தி வழங்குகிறது திராவிட மாடல் அரசு. அது மட்டுமல்ல, விடுதலைப் போராட்டத் தியாகிகளின் குடும்பத்தாருக்கு வழங்கப்படும் ஒய்வூதியம், மாதம் 10 ஆயிரம் ரூபாய் என்பதிலிருந்து 11 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று கடந்த ஆகஸ்ட் 15 அன்று விடுதலை நாளில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றியபோது முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தி இருக்கிறார்.

விடுதலை நாள் உரையில் இந்திய விடுதலையில் தமிழ்நாட்டின் பங்கு முதன்மையானது, முக்கியமானது என்பதை மிகத் தெளிவாகப் பட்டியலிட்டுக் குறிப்பிட்டிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

### நாட்டுக்காக உழைத்த தியாகிகளை போற்றிய இயக்கம் தி.மு.க.!

விடுதலை வீரர்களைப் போற்றிப் பாராட்டுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் சளைத்தது அல்ல.

***மாவீரன் பூலித்தேவனுக்கு, நினைவு மண்டபம்!**

***பாஞ்சாலங்குறிச்சியில், வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கோட்டை!**

***மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு!**

***பாரதியின் வீடு, அரசு இல்லம் ஆனது!**

*** பெருந்தலைவர் காமராசருக்கு, மணிமண்டபம்!**

*** மூதறிஞர் இராஜாஜிக்கு, நினைவாலயம்!**

*** தில்லையாடி வள்ளியம்மாளுக்கு, மணிமண்டபம்!**

*** வீரவாஞ்சியின் உறவினருக்கு, நிதி!**

*** வ.உ.சி. இழுத்த செக்கு, நினைவுச் சின்னம் ஆனது!**

***விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, இலவசப் பேருந்து பயணம்!**

*** தியாகிகளுக்கு, மணி மண்டபம்!**

*** விடுதலைப் பொன் விழா நினைவுச் சின்னம்!**

*** தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு!**

*** நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்குச் சிலை!**

*** தியாகி கக்கனுக்குச் சிலை!**

***சிப்பாய் கலகத்துக்கு நினைவுத்தூண்!**

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

மொழிப்பற்று இனப்பற்றுடன் நாட்டுப்பற்றையும் ரத்த உணர்வாகக் கொண்டவர்கள் நாம்.

*** இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு விழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடினோம்.**

*** மகாகவி பாரதியார் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாளை 'மகாகவி நாள்' என அறிவித்தோம்.**

*** மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தோம்.**

*** செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டோம்.**

*** கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் படைப்புகளைத் தொகுத்துப் பாட நூல் கழகத்தின் சார்பில் வெளியிட்டுள்ளோம்.**

*** உத்தரப் பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு சீரமைக்கப்பட்டது.**

*** கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.**

*** கிண்டியில் மருது சகோதரர்கள் சிலை அமைக்கப்பட்டுள்ளது.**

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களின் ஊழல் கோப்புகளிலும், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களிலும் கையெ முத்திடாமல் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஊர்சுற்றித் திரியும் ஆளுநர் ரவிதான் அந்த குறளுக்குப் பொருத்தமானவர்! தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் சுகம் அனுபவித்துக் கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்வதை கைவிட்டு திருக்குறளுக்கு ஏற்ப நடக்க வேண்டும்!**

*** விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளிக் காட்சிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

*** தனது வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டுக்கு வந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள். அரையாடை அணிவது என்ற முடிவை மதுரை மண்ணில் இருந்துதான் காந்தியடிகள் எடுத்தார்கள். இதன் அடையாளமாகச் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலையை அமைத்துள்ளோம்.**

விடுதலைப் போராட்ட வீரர்களை நாம் ஏன் இந்தளவுக்குப் போற்றுகிறோம் என்றால், தமிழ்நாடுதான் விடுதலைப் போராட்டத்துக்கான விதையை முதலில் விதைத்தது. விடுதலை தாகத்தில் விடுதலை வேகத்தில், நாட்டுப்பற்றில் நம் தமிழ் இனம் இந்தியாவில் உள்ள எந்த இனத்திற்கும் எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. இப்படி பட்டியல்கள் திராவிட மாடல் அரசில் ஏராளமாக இருக்கின்றன என்பதை ஆளுநர் திரு ரவி புரிந்து கொள்ள வேண்டும் .

### ஆதாரமற்ற பொய்களை பரப்புவதா?

இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் முழக்கங்கள் வீரம் விளைந்த தமிழ் மண்ணில் தோன்றியவைதான் என்பதை நாம் பெருமிதத்தோடு நினைவு கூரமுடியும் என்று விடுதலை நாள் விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றினார்கள்.

முதலமைச்சர் தமிழில் ஆற்றிய உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பை கேட்டு வாங்கிப் படித்திருந்தால் ஆளுநர் ரவிக்கு, இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டு வீரர்களைப் பற்றிய அரிச்சுவடியாவது தெரிந்திருக்கும். ஆதாரமற்ற பொய்களை வாட்ஸ்அப் வதந்திகள் போல பரப்புவதையாவது நிறுத்திக் கொண்டிருக்கலாம்.

பா.ஜ.க.வின் ஊதுகுழலாகப் பச்சைப் பொய்களை மட்டுமே பேசும் ஆளுநர் ரவியின் அடிவயிற்று எரிச்சல், 'திராவிடம்' என்ற சொல். அந்த சொல் நிலத்தைக் குறிக்கும். இனத்தைக் குறிக்கும். மொழிக்குடும்பத்தைக் குறிக்கும். இந்தியா முழுவதும் திராவிட மாடல் பற்றிப் பேசப்படுகிறது.

அந்த வயிற்றெரிச்சலில், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதிய இராபர்ட் கால்டுவெல் அதிகம் படிக்காதவர் என்று விமர்சித்திருக்கிறார். கால்டுவெல் என்ன படித்தார் என்பதைவிட எத்தகைய ஆராய்ச்சி மேற்கொண்டார், அதன் விளைவு என்ன என்பதைத்தான் கவனிக்க வேண்டும். ஒருவரின் செயலும் அதன் விளைவும்தான் மக்களிடம் செல்வாக்கைத் தரும். ஆளுநர் ரவியின் பார்வைப்படி, அவர் பெருந்தலைவர் காமராசரையும் கொச்சைப்படுத்தி இருக்கிறார்.

### பி.ஹெச். டி.ஆய்வுக்கு திராவிடத் தலைப்புகள்!

தமிழ்நாட்டில் பி.ஹெச்.டி ஆய்வுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட தலைப்புகள் குறிப்பாக திராவிடத்தைப் பற்றிய தலைப்புகள் அவருக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பித்தம் ஏறச் செய்திருக்கிறது. விடுதலைப் போராட்டத்தைப் பற்றி ஆய்வுகள் இல்லையாம். மகாகவி பாரதியைப் பற்றி, வ.உசி. பற்றி, விடுதலைப்போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பு பற்றி ஏராளமான ஆய்வுகள் உண்டு. பி.ஹெச்.டியாக மட்டுமல்ல, வெகுமக்கள் வாங்கிப் படிக்கக்கூடிய புத்தகங்களாகப் பல பதிப்புகள் வெளியாகியிருக்கின்றன. அதுபோலவே, திராவிட இயக்கப் படைப்புகள் படைப்பாளிகள் பற்றிய ஆய்வுகளும் நிறைந்திருக்கின்றன. இதைக் கண்டு ஆளுநர் வயிறெரிந்திருக்கிறார்.

விடுதலை நாளை துக்க நாளாக அறிவித்தவர்களைக் கொண்டாடுகிறார்கள் என்று நீலிக்கண்ணீர் வடித்துள்ளார் ஆளுநர் ரவி. துக்க நாள் என்று தந்தை பெரியாரும், இன்ப நாள் என்று பேரறிஞர் அண்ணாவும் ஒரே இயக்கத்தில் தங்கள் உள்ளத்துக் கருத்துகளை வெளியிட்டார்கள் என்பதுதான் தமிழ்நாட்டின் வரலாறு.

விடுதலையின் பயன் யாருக்குக் கிடைக்கும் என்பதை விளக்கிய பெரியார், ஆளுநர் ஆர்.என்.ரவி போன்ற பிற்போக்குவாத பத்தாம்பசலிகளின் கைகளில் அதிகாரம் சிக்கி நாசமாகும் என தொலைநோக்குப் பார்வையுடன் சொன்னார். அந்த தந்தைப் பெரியார் தான், மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, இந்த நாட்டுக்கு 'காந்தி தேசம்' என்று பெயர் வைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அதே நேரத்தில், விடுதலை நாட்டின் முதல் பயங்கரவாதச் செயலாக, மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றது கொடியவன் கோட்சே கும்பல். அந்த கோட்சேவையும் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றக் கூண்டில் ஏறியவர்களையும் கொண்டாடுகிற 'பண்பாட்டை'க் கடைப்பிடிக்கும் இயக்கத்தின் சார்பில் ஒவ்வொரு மேடையிலும் திருவாய் மலர்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

### தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஊர் சுற்றும் ஆளுநர்!

திராவிட இயக்கம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக இருந்தது என்று கூவுவது ஆளுநர் மாளிகையில் தயாரிக்கப்படும் உரைகளில் அடிக்கடி இடம்பெறுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்கள் யார், குடி அரசு ஏட்டில் 'இந்த ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்' எனத் தலையங்கம் எழுதிச் சிறை சென்றவர்கள் யார் என்பதும் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால் புரியும். அதுவரை ஆளுநர் மாளிகையே... அடக்கிடு வாயை! பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உருவாக்கிய கவர்னர் என்ற நியமனப் பதவியில்வெட்கமின்றிஉட்கார்ந்துகொண்டு கூச்சமில்லாமல் பொய்களைப் பேசுகிறார் ஆளுநர். திடீரென்று திருக்குறளில் "என்நன்றி கொன்றார்கும்" குறளை படித்திருக்கிறார். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களின் ஊழல் கோப்புகளிலும், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களிலும் கையெழுத்திடாமல் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஊர்சுற்றித் திரியும் ஆளுநர் திரு ரவிதான் அந்த குறளுக்குப் பொருத்தமானவர்! தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் சுகம் அனுபவித்துக் கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்வதை கைவிட்டு திருக்குறளுக்கு ஏற்ப நடக்க வேண்டும்! இல்லையென்றால்ஆளுநர்பதவியை விட்டு விலகி அரசியல்வாதியாக – ஏன் பா.ஜ.க.வின் தலைவராகவோ ஆர்.எஸ்.எஸ்.–ஸின் தலைவராக ஆகட்டும்!

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

ஆரியம் – திராவிடம் பற்றி உளறி

## வரலாற்றை அழிக்கத் துடிக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

*சென்னை, அக். 26 -*

ஆரியம் - திராவிடம் பற்றி உளறி வரலாற்றை அழிக்கத் துடிக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கை வருமாறு:

திருச்சியில் உள்ள தனியார் ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் சார்பில், மருது சகோதரர்கள் நினைவு நாள் விழா நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு பேசிய போது, "தமிழகத்தின் உண்மையான வரலாற்றை அழிப்பதற்கு இங்கு தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உண்மையான வரலாற்றை மறைத்து அதற்கு நிகரான வரலாற்றை எழுத முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அவர்கள், தமிழகத்தில் இன ரீதியாக பிரிவினை இருப்பது போன்றதொரு



தவறான தகவலை உருவாக்கினார்கள்.

திராவிடம் ஆரியம் என்ற இனங்கள் இருப்பது போன்ற பிரிவை உருவாக்கினார்கள். திராவிடர்கள் என்பவர்கள் தனி இனம் என்ற கருத்தாக்கத்தின் தந்தை ராபர்ட் கால்டுவெல். உண்மையில் இங்கு ஆரியம், திராவிடம் கிடையாது. இந்தியாவைப் பிரித்தாளும் சூழ்ச்சிக்கான பிரிட்டிஷாரின் உத்திகளில் இதுவும் ஒன்று.

இன்றளவும் கொண்டாடப்படும் சிலர், லண்டனுக்குச் சென்று பிரிட்டிஷாரிடம் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்று கோரிக்கை வைத்துள்ளனர். இதெல்லாம் மறைக்கப்பட்ட வரலாறு" என்று பேசி உள்ளார். தமிழ்நாட்டின் வரலாற்றை அறியாமல் தொடர்ந்து ஆளுநர் ஆர்.என்.ரவி உளறிக் கொட்டி வருவதில் இதுவும் ஒன்றாகும்.

ரிக் வேதம், அவ்வேதத்திற்குச் சொந்தக்காரர்களை 'ஆரியர்' என்றும் மற்றவர்களை 'அனாரியர்' என்றும் குறிப்பிடு கிறது. ஆரியரை எதிர்த்த மக்களை 'தாசர்' என்று குறிப்பிடுகிறது. தோற்கடிக்கப்பட்ட அனாரியர் (ஆரியர் அல்லாதவர்) சமூகத்தின் நாலாம் பிரிவாக சூத்திரர் (Sudra) ஆக்கப்பட்ட சூத்திரர்களும் இழிந்த பிரிவினர் ஆவர்.

அனாரியர் என்றும், தாசர் என்றும், அசுரர் என்றும் பின்னர் வர்ண சாதி முறையில் சூத்திரர் பஞ்சமர் என்றும் ஒடுக்குமுறைக்கு இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் உள்ளாகி உள்ளமைக்கு இலக்கியப் பதிவுகள் இருக்கின்றன.

'திராவிட' என்ற சொல் மகாபாரதத்தில் வருகிறது. அது தென்னகப் பகுதியைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டு இருக்கிறது.

திராவிடர் பற்றி மனுதர்மம் பேசுகிறது. மனு சாஸ்திரத்தில் (X,43, 44) சாதி இறக்கம் செய்யப்பட்ட சத்திரியர்களைப் பற்றி வருகிறது. திராவிடர்கள் சத்திரியர்களாக இருந்தனர் என்றும், பின்னர் விருசாலர்களாக (சூத்திரர்கள்) தாழ்ந்தார்கள் என்றும், "திராவிடச் சத்திரியர்கள், புனிதச் சடங்குகளை விட்டு விட்டனர் என்றும், அதனாலேயே தாழ்ந்தார்கள்" என்றும் மனு நூல் குறிப்பிடுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதியை 'திராவிடம்' என்று வடமொழியாளர்கள் அழைக்கும் போக்கு நீண்ட காலமாக, மகாபாரதம் உள்ளிட்ட நூல்களில் பேசப்பட்ட ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.

தமிழ் மொழி 'திராவிடம்' என்று வடவர்களால், சமஸ்கிருதம் பேசிய ஆரியர்களால் அழைக்கப்பட்டது. தமிழ் அறிஞர்களே தமிழை 'திராவிடம்' என்று அழைக்கும் போக்கு கி.பி. 17ஆம் நூற்றாண்டு அளவிலே பரவலானது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில், தாயுமானவர் தமிழைத் 'திராவிடர்' என்று குறிப்பிடுகிறார்.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம்(1856) வெளி வரும் முன்பு, தமிழ்மொழி 'திராவிடம்' என்றே தமிழறிஞர்களால் வழங்கப்பட்டது.

இந்த வரலாறுகளை மறைத்து ஆர்.எஸ்.எஸ் என்ன கட்டமைக்கிறதோ அதனை விளம்பரம் செய்யும் முகவராக ஆர்.என்.ரவி செயல்படுகிறார்.

ஆங்கிலேயர்களின் தாள் வணங்கி, ஏகாதிபத்திய வெள்ளை அரசின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கிக் கிடந்த கூட்டத்தைக் கொண்டாடும் ஆளுநர் ரவியிடம் இது போன்ற கருத்துகளைத்தான் எதிர்பார்க்க முடியும். அவை ஒரு போதும் உண்மை ஆகாது.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



விழுப்புரம் அருகே வி.அகரம்காலனி பகுதியைச் சேர்ந்தவர் அமுதா, கீதா இவர்களின் குடிசை வீடு மின்கசிவுக்காரணமாக நேற்று முன்தினம் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதில் வீட்டில் இருந்த பொருட்கள், கட்டில் உள்ளிட்ட பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமாகின. இதனிடையே தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை லட்சுமணன் எம்.எல்.ஏ. சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து அரிசி, காய்கறி, மளிகைப் பொருட்கள் மற்றும் நிதி உதவி உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும் அரசு தரப்பில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பிரபாகரன், மாவட்டப் பிரதிநிதி ராஜேந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் முருகன், கிளைச் செயலாளர்கள் திருமுருகன், கேசவன், மாணவரணி விஜய், கிளை நிர்வாகிகள் சரண்ராஜ், ஆனந்தபாபு, பாண்டியராஜன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், தாசில்தார் யுவராஜ், வருவாய் ஆய்வாளர் கதிர்வேல், கிராம நிர்வாக அலுவலர் சுமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

'நீட் விலக்கு நம் இலக்கு'

## சென்னை - திருவள்ளூர் மாவட்ட சுற்றுச் சூழல் அணி கருத்தரங்கம்!

### மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ. - சூர்யா கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

*சென்னை, அக். 26-*

"நீட் விலக்கு நம் இலக்கு" என்ற தலைப்பில் சென்னை - திருவள்ளூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணியினர் நடத்திய கருத்தரங்கம் அன்பகத்தில் நடைபெற்றது.

மாநில துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் மற்றும் மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.பாஸ்கரன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

கழக இளைஞரணி செயலாளர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி அவர்களின் "நீட் விலக்கு நம் இலக்கு" என்ற மாபெரும் நீட் தேர்வு விலக்குக்கான கையெழுத்து இயக்கம் தொடங்கியதை தொடர்ந்து கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவ சேனாபதி அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் சென்னை - திருவள்ளூர் மாவட்ட கழக சுற்றுச்சூழல் அணியினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் "நீட் விலக்கு" வேண்டி பொது மக்களிடமும், மாணவர்களிடமும், தொழிலாளர்களிடமும் கையெழுத்து ஒப்புதல் எவ்வாறு பெறப்பட வேண்டும் அவர்களுக்கு நீட்டின் கொடுமையை உணர்த்த என்னென்ன செய்ய வேண்டும் என்ற கலந்தாய்வு கூட்டம் சுற்றுச் சூழல் அணி மாநில துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் தலைமையில் சென்னை அன்பகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநில மருத்துவ அணி செயலாளர் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் சிறப்புரை ஆற்றினார். நீட் தேர்வினால் தமிழ்நாட்டுக்கு வரப்போகும் ஆபத்து மற்றும் நீட் தேர்வு விலக்கு அவசியம் பற்றி தலைமைக் கழக பேச்சாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர்கள் மு.பாஸ்கரன், பாலசுப்பிரமணியம், பூண்டி அருண், ஜேக்கப், வெங்கடேசன், லயன் தீனதயாளன், ராமாபுரம் ராஜேஷ், நாகவள், சுந்தரராமன் மற்றும் சென்னை திருவள்ளூர் மாவட்ட கழக சுற்றுச்சூழல் அணி அனைத்து துணை அமைப்பாளர்களும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

---

### எரிபொருள் தட்டுப்பாடு: விமான சேவையை குறைத்தது பாகிஸ்தான்!

*இஸ்லாமாபாத்: அக். 26 -*

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனம் 77 விமானங்களின் சேவையை ரத்து செய்துள்ளது. பாகிஸ்தான் சர்வதேச விமானசேவை நிறுவனத்துக்கு எரிபொருள் வழங்கி வரும் பாகிஸ்தான் எண்ணெய் நிறுவனம், தனது விநியோகத்தை நிறுத்தி உள்ளது. பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட எரிபொருளுக்கானதொகை அதிக அளவில் நிலுவையில் இருப்பதால், தொடர்ந்து எரிபொருள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளது. கடன் தொகையை செலுத்த முடியாத காரணத்தால் 29 உள்நாட்டு விமான சேவை மற்றும் 48 வெளிநாட்டு விமான சேவையை பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனம் நிறுத்தியது. 4 வெளிநாட்டு விமான சேவை மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. லாகூரில் இருந்து டொரோன்டோ, கோலாலம்பூர், இஸ்லாமாபாத்தில் இருந்து பெய்ஜிங், இஸ்தான்புல் ஆகிய 4 சேவைகள் மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகிறது என செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

---

## வலைதளத்தில் வலம் வருவது!




நாள்: 26.10.2023
பொற்கிழி வழங்கிடவும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கும்
வருகை தரும்
கழக இளந்தலைவர்
மாநில இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
அவர்களே வருக! வருக!!
மாண்புமிகு. K.K.S.S.R.இராமச்சந்திரன் அவர்கள்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
உயர்திரு. தனுஷ் எம்.குமார் அவர்கள்
தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர்
தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
துணை அமைப்பாளர்கள்
தங்கம் ரவிக்கண்ணன்
சு.பாபு
பாசறை ஆர். ஆனந்த்
என்.பி.கார்த்திக்
க.கார்த்திக்
மாண்புமிகு. தங்கம் தென்னரசு அவர்கள்
நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு. R.கிருஷ்ணகுமார் அவர்கள்
விருதுநகர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
துணை அமைப்பாளர்கள்
N.C.சிதம்பர பாரதி
M.சேகர்
ஜெகன் பால்பாண்டியன்
S.அய்யனார்
M.கார்த்திகேயன்
S.திலீபன் மஞ்சுநாத்
விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி
MAHA
Ph : 8608118152



NEET
26.10.2023
விருதுநகர் மாவட்டத்திற்கு வருகை தரும்
இளம்தலைவர்
அவர்களே... வருக.. வருக.!
மாண்புமிகு. தங்கம் தென்னரசு B.E.,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்
எஸ்.ஏ.உதயசூரியன்
சிவகாசி மாநகர கழகச் செயலாளர்
சிவகாசி மாநகர திமுக


கலைஞர் 100
1924 - 2023
நாள் :
26.10.2023
வியாழன்
இடம் :
விருதுநகர்
விருதுநகர் மாவட்ட வளர்ச்சி பணிகள் ஆய்வு மற்றும்
மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும்
கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்விற்கு வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
விருதுநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
மாண்புமிகு தங்கம் தென்னரசு B.E.,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் – நிதி மற்றும் மனிதவள மேம்பாடு, மின்சாரத்துறை
க.முருகேசன் BA.,
ஒன்றிய கழக செயலாளர் – சாத்தூர் கிழக்கு
அ.கடற்கரை ராஜ்
ஒன்றிய கழக செயலாளர் – சாத்தூர் மேற்கு
எஸ்.குருசாமி
சாத்தூர் நகர கழக செயலாளர் – நகர்மன்ற தலைவர்
ஆர்.காந்திமதி இராஜேந்திரன்
முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் – மம்சாபுரம்(சாத்தூர் ஒன்றியம்)
வரவேற்று மகிழும் :
எம்.எஸ்.லட்சுமி காந்தன் B.A.,B.Ed.,
விருதுநகர் தெற்கு மாவட்ட தலைவர்
திமுக - கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை


அக்டோபர் 26ல்
கலைஞர் 100 1924 - 2023
விருதுநகர்
தெற்கு – வடக்கு மாவட்ட திமுக சார்பில்
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா மற்றும்
மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள்
கூட்டத்திற்கு பங்கேற்க வருகை தரும்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
கழக இளைஞரணி செயலாளர்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
அவர்களையும்
திருமிகு தயாநிதி மாறன் அவர்களையும்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
மாண்புமிகு K.K.S.S.R.இராமச்சந்திரன்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும்
விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர்
மாண்புமிகு தங்கம் தென்னரசு B.E அவர்களையும்
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக செயலாளர்
அன்புடன் வரவேற்கிறேன்...
K.K.S.S.R.R.ரமேஷ்
விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்
கே.வினோத்குமார் க.இளங்கோ இரா.கோகுல் த.தட்சணாமூர்த்தி
விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்
தி.மு.க
KUMAR DESIGN 96534 62582


மாண்புமிகு தமிழக முதல்வர்
நாள் : 26.10.2023
வியாழக்கிழமை
இடம் : விருதுநகர்
கழகத் தலைவர்
அவர்களின் பொற்கால ஆட்சியில்...
விருதுநகர் தெற்கு – வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில்
இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழாவிற்கு
விருதுநகருக்கு வருகை தரும்...
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச்செயலாளர்,
மாண்புமிகு. உதயநிதிஸ்டாலின் அவர்களை
வருக ! வருக !! என வரவேற்கிறோம்...
மாண்புமிகு. K.K.S.S.R.இராமச்சந்திரன் அவர்கள்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்,
விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்.
திருமிகு. தயாநிதி மாறன் அவர்கள்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
மாண்புமிகு. தங்கம் தென்னரசு B.E., அவர்கள்
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்.
K.G.இராஜகுரு
அமைப்பாளர்
வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி
R.மாதவன் G.வெயில்ராஜ் M.சரவணக்குமார் P.கார்த்திக் S.ராஜ்குமார் P.சுந்தரமூர்த்தி
வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்
வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2023) சென்னையில், உடல்நலக்குறைவால் மறைவெய்திய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், மகன் அஷ்வின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

வட்டு எறிதல் போட்டியில்

# வெண்கலம் வென்ற முத்துராஜாவுக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலை தளத்தில் வாழ்த்து!

சென்னை, அக்.26-

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் வட்டு எறிதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துராஜா வெண்கலபதக்கம் வென்றதற்கு பாராட்டுகள் எனவும், அடுத்தடுத்த போட்டிகளில் தங்கம் வெல்ல வாழ்த்துகிறேன் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**Asian Para Games 2022இல் இந்திய வீரர்கள் தொடர்ந்து பதக்கங்களைக் குவித்து வருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.**

**அந்த வரிசையில், வட்டு எறிதல் போட்டியில் வெண்கலம் வென்றுள்ள நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துராஜா அவர்களுக்கு எனது பாராட்டுகள். முத்துராஜா மென்மேலும் சாதித்து அடுத்தடுத்த போட்டிகளில் தங்கம் வெல்ல வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார்.

காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை! திண்டுக்கல் ஐ.லியோனி தலைமையில் பட்டிமன்றம்!

# இராமநாதபுரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா- “ஏழைப் பங்காளர் கலைஞர்” நிகழ்ச்சி!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் - சிவ.வீ.மெய்யநாதன் - சி.வி.கணேசன் பங்கேற்பு!

இராமநாதபுரம், அக். 26 -

இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில் 21.10.2023 அன்று மாநில அளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா “ஏழைப் பங்காளர் கலைஞர்” என்னும் மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தலைமையேற்றார். பிற்படுத்த ப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன், மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன் , இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், நில நிர்வாக சீர்திருத்த ஆணையர் வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் ஆகியோர் வர வேற்றனர்.

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேச்சு!**

இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்.

சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா “ஏழை பங்காளர் கலைஞர்” நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் ஏழைகளுக்காகத்தான் செய்தார்கள். அவர்களின் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் எண்ணற்ற திட்டங்களை ஏழைகள் பயன்பெறும் வகையில் செய்து வருகின்றார்கள். 1977 ஆண்டுகளில் வறுமை அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமாறி தற்போது திராவிட மாடல் ஆட்சியில் வறுமை குறைந்துள்ளது. இந்த அரங்கத்தில் உள்ளவர்களில் பெண்கள், ஆண்களுக்கு சமமாக அமர்ந்துள்ளனர். இதற்கு காரணம் பெரியார், அண்ணா, கலைஞர் ஆவார்கள். ஏழைகள் வாழ வேண்டும் ஏழைகள் சிறப்போடு இருக்க வேண்டும் ஏழை உயர்ந்தால் தான் நாட்டின் பொருளாதார நிலை உயர்வடையும். ஒரு கிராமத்தில் கூலித்தொழிலாளி இருந்தால் அவர் முன்னேற்றம் இருந்தால்தான் அந்த கிராமம் முன்னேற்றம் அடைந்ததாக அர்த்தம்,

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த உன்னத திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் பெண்கள் சுயமரியாதையுடன் வாழ தொடங்கியுள்ளனர். அவர்களுடைய பொருளாதார நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த முறையை மாற்றி தற்போது மனிதனை பொருளாதார ரீதியாக அனைத்து வகையில் முன்னேறிடும் வகையில் திட்டங்களை வகுத்துக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். பொருளாதாரம் உயரும் போது நாகரிகமும் சேர்ந்து வளரும் இந்த நிலையை கொண்டு வந்த பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சேரும். நடுத்தர மக்களை உயர்ந்த இடத்திற்கு வருவதற்கு உரிய திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வெற்றி கண்டவர்கள் அண்ணா, கலைஞர் அவர்களின் வழியில் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்.

இந்த சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய பணிகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகளை பின்பற்றி செயலாற்றுவோம் என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எம்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

**அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பேச்சு!**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் , புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா இன்றைய தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. நம்முடைய மாவட்டத்தில் மீனவர் மாநாடு நடைபெற்றது. அதனை தொடர்ந்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் தலைமையில் இன்றைய தினம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மனிதநேயமிக்கவர் மிகவும் அன்பாக பேசக்கூடியவர் பண்பாளர் அனைவராலும் மதிக்கப்படக் கூடியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு முதலமைச்சர் மட்டும் இல்லாமல் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சிறுபான்மையினர் மக்கள் என அனைவரும் போற்றக்கூடிய ஒப்பற்ற தலைவர் ஆவார் என்று தெரிவித்தார்.

**அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!**

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.பெய்யநாதன், கருத்தரங்கினை துவக்கி வைத்து பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொது மக்களின் நலன் கருதி பல என்னற்ற திட்டங்களை வகுத்து அதில் வெற்றி கண்டார்கள். நாம் இன்றைய தினம் பொருளாதாரத்திலும் சரி, கல்வியிலும் சரி நாம் உயர்ந்திருக்கின்றோம் என்றால் அதற்கு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே. முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் அவர் கொண்டு வந்த இலவச மின்சார திட்டம் 1989 தமிழ்நாடு முழுவதும் உணவு உற்பத்தியில் பின்தங்கி இருந்தது. அந்த நேரத்தில் விவசாயிகள் மின்கட்டணம் செலுத்தி விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருந்து வந்தனர். 1989இல் மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுவுடன் இலவச மின்சார திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டம் இன்று வரை தொடர்ந்து வருகின்றது. அன்றைய தினம் 13 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை தந்ததால் தான் இன்றைக்கு விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது என்றால் அதற்கு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். தமிழ்நாட்டில் நெடுஞ்சாலை துறையின் மூலம் நான்கு வழி சாலைகளை ஆறு வழி சாலையாக மாற்றி ரூ.55 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகளை அமைத்து தந்தவர் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார். இவ்வாறு என்னென்ன தேவையோ அத்தனை கட்டமைப்புகளையும் முடித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே.அதே போல் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 187 நாடுகள் 2000 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்ற மாபெரும் விளையாட்டுத் திருவிழாவினை சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தியதால் உலக நாடுகளே வியக்கும் வகையில் விளையாட்டுப் போட்டியை நடத்திக் காட்டிய தன் மூலம் நாம் தமிழ் நாட்டை தலை நிமிரச் செய்தவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். சமூக நீதி என்றைக்கும் உயர்த்தி பிடிக்கக் கூடிய தமிழ்நாட்டில் ஆட்சி இன்றைக்கு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திராவிட இயக்கத் தலைவர்கள் டாக்டர் நடேசனார், டாக்டர் டி.எம்.நாயராக, தந்தை பெரியாராக, பேரறிஞர் அண்ணாவாக இவர்களின் ஒட்டுமொத்தமாக நமக்கு கிடைத்த தலைவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். கலைஞர் தனி மனிதர் அல்ல; கலைஞர் ஒரு சகாப்தம், தமிழ் மொழியினை செம்மொழியாக்கி தந்தவர் அவர்தான். திராவிட இனத்தின் அடையாளம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவோம். என சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வரவேற்பு! பாராட்டு!

# ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை உயர்த்திய முதல்வருக்கு நன்றி !

## சங்கத் தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை!

சென்னை அக்: 26-

ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை உயர்த்தி,பல லட்சக்கணக்கான ஆசிரியர் பயிற்சி முடித்து பணி வாய்ப்புக்காக காத்திருக்கிற குடும்பங்களின் வாழ்விலே ஒளி விளக்கேற்றி ஆணையிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து,

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழக பள்ளிக்கல்வித் துறை வரலாற்றில் 57 வயது வரை ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெற்று வந்தன. பிற துறைகளைப் போன்று அல்லாமல் ஆசிரியர் பணியை மேற்கொள்பவர்கள் தொடர்ந்து தனியார் பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்றி வருகின்ற காரணத்தினால் 57 வயது வரை எப்பொழுது வேண்டுமானாலும் அரசு பணியில் ஆசிரியராக சேரலாம். இதனால் கற்பித்தல் பணிக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்பதை உணர்ந்த,

ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் பாதுகாவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 57 வயது வரை ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெறலாம் என்று ஆணையிட்டு பொன்னான வாய்ப்பினை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு வழங்கினார்.

ஆசிரியர் பயிற்சி முடித்து ஆசிரியர் பணி நியமனத்திற்காக போட்டி தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்ற வேளையில் பலகட்ட முயற்சிகளை மேற்கொண்டு இருக்கும்போது கடந்த ஆட்சி காலத்தில் ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை பொது பிரிவினருக்கு 42 ஆகவும் இதர பிரிவினருக்கு 47 ஆகவும் குறைத்து அதிர்ச்சி அளித்தனர்.

கடந்த ஆட்சியாளர்கள் ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை குறைத்த தன் விளைவாக ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் இனி நமக்கு எதிர்காலமே இல்லை என்று கருதி மிகுந்த மன உளைச்சலில் வாழ்க்கை இருண்ட நிலையில் செய்வதறியாது புலம்பி வந்தனர்.

இதனால் அவர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்த வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டனர். பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி அவதியுற்று வந்தனர்.

கடந்த ஆட்சிகாலத்தில் TET தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தியும் அன்றைய ஆட்சியாளர்கள் செவி மடுக்கவில்லை.

பல ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மூடப்படுகின்ற அவல நிலை ஏற்பட்டது

இவர்களின் நியாயமான கோரிக்கையை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் ஆதரித்து தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது.

எங்கள் கோரிக்கையின் நியாயத்தன்மையை உணர்ந்து பள்ளி கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று இந்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி ஆசிரியர் பணியில் சேர்ந்திட பணி நியமன வயது வரம்பை பொது பிரிவினருக்கு 42 வயதில் இருந்து 53 வயதாகவும், தாழ்த்தப்பட்ட,மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்ப டுத்தப்பட்ட இதர பிரிவி னருக்கு 47 வயதிலிருந்து 58 வயதாகவும் ஆணையிட்டு பல லட்சக்கணக்கான ஆசிரியர் பயிற்சி முடித்து பணி வாய்ப்புக்காக காத்திருக்கின்ற குடும்பங்களின் வாழ்விலே ஒளி விளக்கேற்றியுள்ள தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் முயற்சி யினை மேற்கொண்ட பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் கல்வித்துறை உயர் அலுவலர்களுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

இனிவரும் காலங்களில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் நலன் சார்ந்த கோரிக்கைகள் ஆணைகளாக வெளிவரும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கிறது.

இவ்வாறு கு.தியாகராஜன் தனது அறிக்கையில் நன்றி தெரிவித்துள்ளார்.

தென்னை சிவா - என்.ஏ.செல்லப்பன் முன்னிலை - திப்பம்பட்டி ஆறுச்சாமி பங்கேற்பு!

# தொண்டாமுத்தூர் பேரூரில் நீட் விலக்கு - கையெழுத்து இயக்கம்!

## மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமை!

கோவை, அக். 26-

கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் பேரூர் கழகத்தின் சார்பில் இன்று மாலை (26.10.2023 - வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் கோவை வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்கவும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஆலோசனையின் படியும் ஆதி திராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.வின் அறிவுறுத்தலின்படியும், மாவட்டம் தோறும் கழக அணிகளின் சார்பில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற அடிப்படையில் நீட்டை நம் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் பொது மக்கள் மத்தியில் கையெழுத்து இயக்கம் பொதுமக்கள் மத்தியில் நடத்த வேண்டும் என்று ஆணையிட்டதற்கு இணங்க கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமையில், ஒன்றியக் கழகச் செயலாளர் சாமிப்பையன் என்கிற என்.ஏ. செல்லப்பன், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் வழக்கறிஞர் தென்னை சிவா தொண்டாமுத்தூர் பேரூர் கழக செயலாளர் குமார் முன்னிலையிலும் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற உள்ளது. இந்த கையெழுத்து இயக்கத்தை மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான திப்பம்பட்டி ஆறுச்சாமி கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தை துவங்கி வைக்கிறார். இந்த கையெழுத்து இயக்கத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகளும் பேரூர் கழக நிர்வாகிகளும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் அணியின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் - துணை அமைப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை நடத்த உள்ளார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி ஆலோசனைப்படி மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் தென்னை சிவா செய்து வருகிறார்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.இளைஞர் அணி, மாணவர் அணி,மருத்துவரணி சார்பில், மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. தி.மு.க.கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார். இதில் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், டாக்டர் செ.வல்லபன், வி.எஸ்.பெரியசாமி, வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லத்தம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், து.ஹரிபாஸ்கர், டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல் கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், தங்க.கமல், பா.ரினோபாஸ்டின், கிருஷ்ணாஇள, ராகவி ரவிக்குமார்,தமிழ்வேந்தன், அ.இளையராஜா, டாக்டர் அ.கருணாநிதி, தி.இராசா, மகாதேவி ஜெயபால் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வங்கதேசம் அருகே கரையை கடந்தது ‘ஹமூன்’புயல்!

சென்னை, அக். 26-

சென்னை, மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. இந்த புயலானது நேற்று முன்தினம் அதிதீவிர புயலாக மாறி பின்னர் மிகத்தீவிர புயலாக மாறியது.

இந்த புயலானது ஆழமான காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வங்கதேசத்தில் கெபுரா சிட்டகாங் இடையே கரையை கடக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தீவிர புயலாக இருந்த ‘ஹமூன்’ புயலாக வலுவிழந்து வங்கதேசம் அருகே கரையை கடந்தது. இது அடுத்த 6 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் முதன்மைச் செயலாளர்

# முனைவர் பி.செந்தில்குமார் புதல்வர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.26-

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமாரின் புதல்வர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார் அவர்களின் மகன் அஷ்வின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**இளம் வயது மகனைப் பிரிந்து வாடும் அவருக்கும், அவரது குடும்பத்தினர்க்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தென்னாப்பிரிகாவில் பிரிக்ஸ் நாடுகளிடையே நடைபெற்ற பீச் வாலிபால் போட்டியில் இந்திய அணி வெள்ளிப் பதக்கம் பெற்றது. இந்த அணியில் இடம் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த வீரர்களான நாகை மாவட்டம் நாகை நம்பியார் நகரைச் சேர்ந்த அபிதன், தஞ்சை மாவட்டம் நெடுவாக்கோட்டையைச் சேர்ந்த பூந்தமிழன் ஆகியோர் சொந்த ஊர் திரும்பினர். இவர்களுக்கு நாகை புதிய பேருந்து நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வெள்ளி பதக்கம் பெற்ற அபிதர், பூந்தமிழன் ஆகியோரை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வரவேற்று பொன்னாடை பேத்தி வாழ்த்துத் தெரிவித்தார். உடன்மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் என்.மோகன்தாஸ், நகர்மன்ற உறுப்பினர் சுரேஷ் மற்றும் பலர் உள்ளனர்.



இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி 2வது மாநில மாநாடு 'இல்லம் தேடி இளைஞர் அணி' உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்து மதுரை கிழக்கு தொகுதி ஆனையூர் பகுதி கழகம் சார்பில் நடைபெற்ற இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் தொகுதி பொறுப்பாளர் பெருநாழி போஸ், மாவட்ட துணைச் செயலாளார் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், பகுதி செயலாளார் மருதுபாண்டியன், மகளிர் அணி அமைப்பாளார் உமாசிங்க தேவன், இளைஞர் அணி நிர்வாகிகள் மருதுராஜா, வெற்றிச்செல்வன், வன்னிமுத்து பாண்டி, இளங்கோவன், மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர், கழக நிர்வாகிகள் ஆனையூர் பெரியசாமி, பாபு, செல்வகணபதி, கலை கார்த்திகேயன், முருகேசன், கோபாலகிருஷ்ணன், கொடிவைரன் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ11.97 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

# பெரம்பலூர் 'நீட்' தேர்வு விலக்கு வேண்டி கையெழுத்து இயக்கம்!

## நெல்லிக்குப்பம் புகழேந்தி - குன்னம் சி.இராஜேந்திரன் - பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், அக். 26 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ ரணி சார்பில், நீட் தேர்வு விலக்கு வேண்டி, தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மேனாள் ஒன்றிய அமைச்சரும், கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.இராசா ஆகியோர் காணொளிக் காட்சி வாயிலாக நீட் தேர்வு ஏன் ரத்து செய்யப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறி பேசினார்கள்.

அதன் பிறகு மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

தி.மு.க.கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி. முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ். நல்லத்தம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.முருகேசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாரூக், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் அ.முத்தரசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பா.ரினோ பாஸ்டின், கிருஷ்ணாஇள, ராகவி ரவிக்குமார்,தமிழ் வேந்தன், அ.இளையராஜா, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் கே.சி.ஆர்.குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நெ. அருண்குமார்,

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.கவியரசு, மருத்துவ அணி மாவட்ட தலைவர் மருத்துவர் ஜெயலட்சுமி, மாவட்ட மருத்துவ அணி துணைத் தலைவர் மருத்துவர் தனபால், மருத்துவ அணி மாவட்ட துணை அமைப்பாளர் மருத்துவர் பாலச்சந்தர், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் சிலம்பரசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

# புதுக்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு விழா! பேச்சுப் போட்டி!

## கவிச்சுடர் கவிதைப் பித்தன் - திருச்சி எழில்மாறன் செல்வேந்திரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, அக். 26 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நடத்தும் பள்ளி மாணவ - மாணவியருக்கான கவிதைகள், திரைப் பட வசனங்கள் ஒப்பித்தல் போட்டி 22.10.2023 அன்று ஞாயிறு காலை 10.00 மணியளவில் அறந்தாங்கி கட்டுமாவடி சாலை நூர் மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சட்டம், நீதி மன்றங்கள். சிறைத்துறை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன்,

கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ஆர்.மேகநாதன் வரவேற்புரையாற்றினார்.

கழக சட்ட திருத்தக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மிசா சி.ராமநாதன், பேச்சு போட்டியின் நடுவராக கழக இலக்கிய அணி துணைத் தலைவர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் கலந்து கொண்டு முதல் மூன்று பரிசு பெறுவதற்கு தகுதியானவர்களை தேர்வு செய்தார்.

இந்நிகழ்வுகளில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன், அடைக்கலம், க.மதியழகன், மாவட்டப் பொருளாளர் ஜெ.அபுதாகீர், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் உதயம் சண்முகம், தவ. பாஞ்சாலன், வே.பொன்துரை, சக்தி இராமசாமி. பொன். கணேசன், அ. முத்து, அழகு சிதம்பரம், கே.பி.கே.டி.தங்கமணி, கே.எஸ்.ரவி, எஸ்.குமார் (எ) துரைக்கண்ணு. ஆர். கணேசன், கீரமங்கலம் பேரூர் செயலாளர் கே. சி.சிவக்குமார்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர், ஆர்,கே.கலைமணி, இரா. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் : சீனி.பழனியப்பன், வீரய்யா, அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் த.மணிராஜன், தி.முத்து, கே.ஆர். இராமசாமி. எம். ஜி (எ)ராமச்சந்திரன், சர்வேயர் மா.நடசேன், எம். எம்.பாலு, கலைச்செல்வன், பாத்திமா பீவி, தேவி, கருணாகரன், ஆலங்குடி செல்வராஜ், இரா.தமிழ்ராசு, நசுருதீன், அருண்குமார், சுப,பழனிச்சாமி, ஆக்காட்டி ஆறுமுகம், நாகராஜன், சுப. சின்னையா, கி.அ.லோகநாதன், பிரகதம்பாள் ராஜேந்திரன், கே.என்.பி.டி.எஸ்.நாடிமுத்து, ஆ.ஆறுமுகம், சோ.ராமச்சந்திரன், டி.ரமேஷ். செந்தில்வேலன், முல்லை ரமேஷ், ராமசாமி, கவிஞர் ஆ.மரிய எட்வின், உதயசூர்யா, சிக்கந்தர், நஜீமுதீன், முருகேசன், கண்ணன், சரஸ்வதி, செல்லத்துரை, பாஸ்கரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கவிதைப் போட்டியில் முதல் பரிசு மணமேல்குடி கீர்த்திகா, இரண்டாம் பரிசு கார்த்திகா, மூன்றாம் பரிசு திவ்ய துர்கா, வசன போட்டியில் முதல் பரிசு உமா மகேஷ்வரி, இரண்டாம் பரிசு பொன்பேத்தி கவுசிகா, மூன்றாம் பரிசு ஆலங்குடி சந்தோஷ் ஆகியோர் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது.

முடிவில் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைத் தலைவர் பாபு ஜான் நன்றி கூறினார்.

## ஆத்தூர் ஒன்றியத்தில் ரூ.98 கோடி மதிப்பீட்டில்

# நவீனமுறையில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி!

## அமைச்சர் ஐ.பெரியசாமி முயற்சியில் அமைகிறது!

ஆத்தூர், அக். 26 -

ஆத்தூர் ஒன்றியத்தில் ரூ.98 கோடி மதிப்பில் பிரம்மாண்டமான முறையில் கட்டிட வல்லுநர்களை கொண்டு கட்டப்படும் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 40 வகுப்பறைகள், கணிணி லேப், பிரம்மாண்டமான நூலகம், தனி ஆய்வகங்கள், ஆயிரம் பேர் அமரக்கூடிய உள்ளரங்கம், சிறந்த விளையாட்டு மைதானத்துடன், ஐ.டி.பார்க் கட்டிடம் போல் கட்டப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பாக 1989ம் ஆண்டு போட்டியிட்ட ஐ.பெரியசாமி இன்று வரை (2023) ஒரே தொகுதியில் போட்டியிட்டு வருகிறார்.

வீட்டு வசதி துறை, சிறைத்துறை, மற்றும் வருவாய்துறை, பத்திர பதிவு துறை, அமைச்சராக பொறுப்பில் இருந்த ஐ. பெரியசாமி 2021ம் வருடம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தமிழக சட்டமன்ற வரலாற்றிலே யாரும் பெறாத அளவிற்கு 1லட்சத்து 35 ஆயிரத்து 571 வாக்குகள் கூடுதலாக பெற்று சட்டமன்ற தேர்தலில் தனி முத்திரை பதித்தார். அவருக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்கள் அமைச்சரவையில் கூட்டுறவு மற்றும் பத்திர பதிவு துறை அமைச்சராக பதவி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கூட்டுறவு துறை அமைச்சராக பொறுப்பில் இருந்த ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் வசிக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் நலன் கருதி எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தினார். குறிப்பாக கிராம புறங்களில் உள்ள நடுநிலை மற்றும் உயர்நிலைபள்ளிகளை தரம் உயர்த்தி மேல்நிலை பள்ளிகளாக கொண்டு வந்தார். இதன் மூலம் பள்ளி படிப்பு படிக்கும் மாணவர்களின் தரம் உயர்ந்தது. அதன்பின்னர் ஆத்தூர் தொகுதியில் வசிக்கும் மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி படிப்பதற்காக திண்டுக்கல், நிலக்கோட்டை, பழனி செல்வதை அறிந்த கூட்டுறவு துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழகத்தில் முதன்முறையாக கூட்டுறவு துறை சார்பாக

கூட்டுறவுத் துறை கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சீவல்சரகு ஊராட்சிக் குட்பட்ட சுதனாகிய புரத்தில் கொண்டுவந்தார்.

இதுபோல அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ரெட்டியார்சத்திரத்திற்கும் கொண்டு வந்தார். ஆத்தூர் ஒன்றியத்தில் கூட்டுறவுத் துறை சார்பாக ரூ.98 கோடி மதிப்பில் சுமார் 8 ஏக்கர் மதிப்பில் கட்டப்பட்டு வரும் கல்லூரி சென்னையில் உள்ள ஐ.டி.பார்க் போல் அமைக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக கல்லூரியில் நிர்வாக அலுவலகம், ஆசிரியர்கள் ஓய்வறை, மாணவர்களுக்கு 40 வகுப்பறைகள், கணிணி லேப், பிரம்மாண்டமான நூலகம், வேதியியல், இயற்பியல், உயிரியலுக்கான ஆய்வகங்கள், கல்லூரி மாணவர்கள் ஆயிரம் பேர் அமரக்கூடிய மிக பிரம்மாண்டமான உள்ளரங்கம், மாணவர்கள் விளையாட சிறந்த விளையாட்டு மைதானத்துடன் கட்டப்பட்டு வருகிறது. கட்டிட பணிகள் இரவு, பகல் பாராமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது தவிர கல்லூரி தேசிய நான்கு வழிச் சாலை பகுதியில் அமைந்திருப்பதால் பிரம்மாண்டமான நுழைவு வாயில் சிறந்த கட்டிட கலைஞர்களை கொண்டு வடிவமைக்கப்பட்டு வருகிறது. குறைவான கட்டணத்தில் தரமான கல்வியை கிராமப்புற மாணவர்களுக்கு வழங்கவும், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இல்லாத அளவிற்கு அதிநவீன வசதியுடன் கல்லூரி அமைவதற்கு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எடுத்து வரும் முயற்சிக்கு தொகுதி மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளது.

இது குறித்து ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கேட்டபோது நான் கூட்டுறவு துறை அமைச்சராக இருந்த போது தமிழகத்திலே முதல் கூட்டுறவு துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொண்டு வந்தேன். கல்லூரியை ஆத்தூர் ஒன்றியத்திற்கு கொண்டு வந்த சீவல் சரகு ஊராட்சியில் அமைவதற்கு காரணம் அந்த ஊராட்சியை சுற்றியுள்ள 8க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் வசிக்கும் மாணவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளனர். ஒரு சில மாணவர்கள் காலையில் 4 மணிக்கு எழுந்து பூப்பறிக்கும் வேலைக்கு சென்று விட்டு அதன்பின்பு பள்ளிக்கு செல்வதை பார்த்திருக்கிறேன். இந்த கல்லூரியை (சீவல்சரகு ஊராட்சி) இப்பகுதியில் அமைத்தால் இதனை சுற்றியுள்ள ஆத்தூர். வீரக்கல், வக்கம்பட்டி, முன்னிலைக்கோட்டை, என்.பஞ்சம்பட்டி, காந்தி கிராமம், அம்பாத்துரை, தொப்பம்பட்டி, செட்டியபட்டி, போடிகாமன்வாடி, எஸ்.பாறைப்பட்டி, அக்கறைப்பட்டி, மற்றும் சின்னாளபட்டி பேரூராட்சி, சித்தையன்கோட்டை பேரூராட்சியை சேர்ந்த ஏழை மாணவர்கள் மற்றும் கைத்தறி நெசவு தொழிலாளர்களின் பிள்ளைகள் பயன் பெறுவார்கள் என்ற அடிப்படையில் கல்லூரியை கொண்டுவந்துள்ளோம்.

இந்த கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் நவீன வசதியுடன் கூடிய அரசு கல்லூரியில் படிக்கிறோம் என்பதை உணர்வார்கள். வரும் 2024ம் ஆண்டுக்குள் கட்டிட பணிகள் முடிவடைந்து திராவிட மாடல் ஆட்சி நாயகன் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்பட உள்ளது என்றார். வெளி மாவட்டம் மற்றும் வெளியூர்களிலிருந்து மாணவர்கள் அதிகளவில் சேர்ந்தால் அவர்களுக்கு; விடுதி வசதியும் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளி கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டியை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், விஜயக்குமார், தரங்கம்பாடி பேரூர் கழகச் செயலாளர் முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல், துணைத் தலைவர் பொன்ராஜேந்திரன், பேரூர் கழக அவைத்தலைவர் கந்தசாமி மற்றும் பலர் உள்ளனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கூ.பீ.ஜெயின் தலைமை! கலைஞர் நுற்றாண்டு விழா!

# வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் தொடர்ந்து 3 நாட்கள் மாபெரும் மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் துவக்கி வைக்கிறார்! தயாநிதிமாறன் எம்.பி. - அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, அக். 26 -

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "உடல் குணமாகட்டும்! உயிர் நலமாகட்டும்! " வில்லிவாக்கம் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாம்கள் 27.10.20223, 28.10.2023, 29.10.2023 வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து மாபெரும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

முதல் நாள் மருத்துவ முகாம் (27.10.2023 வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில், வில்லிவாக்கம், எம்.டி. எச்.சாலையில் அமைந்துள்ள டி.கே.ஏ.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைக்கின்றார்.


மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ. பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ். பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா. இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி.எப்.சுரேஷ் பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா.அகிலன், பா. ஜானி, சொ.முருகேசன், ப. லோகுபாபு, ஜெ.தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.கோபாலகிருஷ்ணன், மா.கபிலன், கோ.மணிவேந்தன், பா.தே. தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.பி. தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேர்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ப.ரங்கநாதன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளரும், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளருமான வே.கௌதமன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அண்ணல் தங்கோ
### அக்டோபர் 26 (2015)



இளம்வயதிலேயே திராவிடர் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சைதை பகுதியில் வட்டச் செயலாளர் பொறுப்பேற்று அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



விழுப்புரம் நகர துணை செயலாளர் வி. புருஷோத்தமன் எம். சி திருமண விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் திருமதி.விசாலாட்சி பொன்முடி ஆகியோர் மணமக்களை வாழ்த்தினார்கள். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - சேர்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி,அக்.26-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர், ஓட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிஎண்கள் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள புதியவாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வது, இடமாற்றம் செய்வது, இறந்தவர்கள் மற்றும் நிரந்தரமாக வெளியூரில் உள்ள வாக்காளர்களை நீக்கம் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தியாகவுள்ள புதியவாக்காளர்களை அவசியம் சேர்க்க வேண்டும். புதியதாகபெயர் சேர்ப்பதற்கு படிவம் 6,ஆதார் விபரம் சேர்ப்பதற்கு 6பி, பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7,எழுத்துப்பிழை,முகவரி மாற்றம் செய்தல் மற்றும் புதியவாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கு படிவம் 8 பூர்த்தி செய்து 27.10.2023 முதல் 12.12.2023 வரைவாக்குச்சாவடி மையங்கள் அல்லது வாக்காளர் சேர்ப்பிற்கானதாசில்தார் அலுவலகத்தில் வழங்கலாம் என்று மாவட்டக் கழகச்செயலாளர் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மங்கள இசை, திருமுறை தேவாரப் பாடல்களுடன் விழா!

# மாமன்னன் ராஜராஜ சோழனின் 1038ஆம் ஆண்டு சதயவிழா!

## 1038 பரதநாட்டிய கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி

**தஞ்சை, அக். 25-**

**தஞ்சை பெரிய கோயிலில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1038ம் ஆண்டு சதயவிழா நேற்று முன்தினம் காலை மங்கள இசை, திருமுறை தேவாரப்பாடல்களுடன் விழா நடைபெற்றது.**



தமிழர்களின் கட்டிடக் கலைக்கும், சிற்ப கலைக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து வரும் உலகப் புகழ் பெற்ற தஞ்சை பெரியக் கோவிலை எழுப்பிய சோழப் பேரரசன், மாமன்னன் இராஜராஜ சோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்தார். மாமன்னன் இராஜராஜன் பிறந்தநாள், ஆண்டுதோறும் சதய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி 1038ம் ஆண்டு சதய விழாவின் முதல் நாள் நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை மங்கள இசையுடன் துவங்கியது. தொடர்ந்து களிமேடு அப்பர் அவையினரின் தேவாரம், திருவாசகம் இசைக்கும் திருமுறை அரங்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனையடுத்து தஞ்சை மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் தலைமையில் தமிழ் அறிஞர்கள், தொல்லியல் துறை அறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், கல்வெட்டு ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் மாமன்னன் குறித்த சிறப்பு கருத்தரங்கமும், 1038 பரதநாட்டிய கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சதயவிழா குழு தலைவர் செல்வம், அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சதயவிழாவைக் காண்பதற்காக ஏராளமான வெளிநாட்டினரும் தஞ்சையில் குவிந்துள்ளதால், நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள மருதுபாண்டியர்கள் நினைவு மண்டபத்தில், நேற்று முன்தினம் (24.10.2023) மருதுபாண்டியர்களின் 222வது நினைவு தினத்தை முன்னிட்டு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மாணவரணி, இளைஞரணி, மருத்துவணிகளின் சார்பில் நீட் தேர்வு மசோதாவை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம் ஈரோடு பூந்துறை ரோடு எ.ஆர்.ஆர். திருமண மண்டபத்தில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்து உரையாற்றினார். நிகழ்வில் நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், கே.இ.பிரகாஷ், வீரமணி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகள் நிர்வாகிகள், வார்டு, ஊராட்சி கழக நிர்வாகிகள், மாணவர்கள், பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டார்கள்.

### நெல்லையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாபெரும் உற்சாக வரவேற்பு!

## இரா.ஆவுடையப்பன்- டி.பி.எம்.மைதீன்கான் வேண்டுகோள்!

நெல்லை, அக்.26-

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட கழகத்தின் சார்பாக நாளை (27.10.2023 - வெள்ளிக் கிழமை) காலை 9 மணிக்கு கே.டி.சி.நகர் பாலம் அருகே கலைஞர் நூற்றாண்டு விழா திடலில் நடைபெறும் கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் அன்று காலை 11 மணி அளவில் கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நடைபெற உள்ள கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க வருகைதரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (26.10.2023- வியாழன்) மாலை 7 மணி அளவில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

அமைச்சராகப் பொறுப்பேற்று முதன்முறையாக திருநெல்வேலிக்கு வருகை தருகின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்பதற்காக ஒருங்கிணைந்த மாவட்ட கழகத்தின் சார்பில் தாழையூத்து பண்டாரகுளம் அருகில் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி!**



41

# இடம் பொருள் கலைஞர்

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

## வீடுகளுக்குள் உலகைக் கொண்டு வந்த சமத்துவம்!

அது ஒரு காலம். 90-களின் இறுதி வரை, மத்திய தர, மேல் மத்திய தர வீடுகளில் மட்டுமே தொலைக்காட்சிப் பெட்டிகள் இருந்தன. அவையும்கூட கருப்பு வெள்ளை டி.வி.கள்தான். செல்வந்தர் வீடுகளில் கலர் டி.வி.க்கள் நுழைந்த பிறகே, சிறுக சிறுக மத்திய, மேல் மத்திய தர வீடுகளில் சாதாரண டி.வி.கள் வியாபிக்கத் தொடங்கின.

அடித்தட்டு, விளிம்புநிலைச் சமூக மக்களின் வீட்டு நிலைமை குறித்து, கேட்கவே வேண்டாம். சாதி வேற்றுமைகள் நிறைந்திருந்த அன்றெல்லாம், கிராமங்களில் இருந்த பொதுத் தொலைக்காட்சி அறைகள் மட்டுமே அவர்களுக்கு ஒரே ஆறுதலாக இருந்தன. அதிலும் கூட, ஞாயிற்றுக்கிழமை படம், கிரிக்கெட் போட்டிகள் ஆகியவற்றை மட்டுமே காண முடியும். அதற்கும் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு கால்கடுக்க நிற்க வேண்டும்.

ஓரளவு பரந்த மனம் கொண்ட, டி.வி. வைத்துள்ள வீட்டுக்காரர்கள் அந்த மக்களில் சிலரை, கதவுக்கு வெளியில் இருந்து **‘ஒளியும் ஒலியும்’, ‘வயலும் வாழ்வும்’** போன்ற நிகழ்ச்சிகளைப் பார்க்க அனுமதித்தார்கள்.

### தேர்தல் அறிக்கையின் நாயகன்

இவ்வாறு ஜன்னல் கம்பிகளூடேயும், நிலைக்கதவுகளுக்கு அப்பால் வெளியே நின்றும் கூனிக் குறுகி, சுயமரியாதை இழந்து டி.வி. பார்க்கப்பட்டு வந்த நிலைமையை, 2006-இல் ஒட்டுமொத்தமாக மாற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த ஆண்டு நடைபெற்ற **சட்டமன்றத் தேர்தலின் நாயகன் என்று தி.மு.கழகத்தின் ‘இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி’** என்ற வாக்குறுதியைச் சொல்லலாம்.

ஆண்களுக்காவது அடுத்தவர் வீடுகளில், பொதுத் தொலைக்காட்சிப் பெட்டி அறைகளில் கூட்டத்தோடு கூட்டமாக இருந்து பார்க்கிற வசதி இருந்தது. ஆனால், பெண்களுக்கு அதுவும் இல்லை. அதனால்தான் 2006-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், **‘மகளிர் மனம் மகிழ்ந்து பொது அறிவு பெற்றிட, வீடு தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி’** என்ற வாக்குறுதி ஏழை, எளிய தாய்மார்களை முன்னிறுத்தி அளிக்கப்பட்டது. கழகஅரசு அமைந்தவுடன், அந்தத் திட்டம், தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலமாக செயல்படுத்தப் பட்டது.





**கலையை விளக்குகின்ற பெட்டி. இலக்கியத்தை விளக்குகின்ற பெட்டி. கருத்துகளை எடுத்துச் சொல்லுகின்ற பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எண்ணச் சோலையாக அமைகின்ற பெட்டி!**

### வெளிப்படையான கொள்முதலுக்குக் குழு

இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முறையாகக் கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. முதலமைச்சர் தலைமையிலான இந்தக் குழுவில் தி.மு.க. சார்பாக அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இன்றைய கழகத் தலைவர், காங்கிரஸ் சார்பில் டி.சுதர்சனம், பா.ம.க. சார்பில் கோ.க.மணி, சி.பி.எம். சார்பில் சி.கோவிந்தசாமி, சி.பி.ஐ. சார்பில் வை.சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.செல்வம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் எச்.அப்துல் பாசித், புரட்சி பாரதம் சார்பில் பூவை மு.ஜெகன் மூர்த்தி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் குழு 2006-ஆம் ஆண்டு ஜூன் 27 அன்று கூடி, இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க முதற்கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, வெளிப்படையான தேசிய ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும், அடுத்த கட்டமாக வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

### சமத்துவபுரத்தில் தொடங்கப்பட்ட திட்டம்

தொடர்ந்து, செப்டம்பர் 15 அன்று பேரறிஞரின் பிறந்த நாள் மற்றும் செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியார் பிறந்த நாள் ஆகிய விழாக்களையொட்டி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. முதற்கட்டமாக வழங்கப்படவுள்ள 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குச் செலவாகும் தொகை தவிர, அந்த நிதியாண்டுக்கு மட்டும் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், முதற்கட்டமாக, பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், அதுவரையில் சமத்துவபுரம் அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்தில், அங்குள்ள மலைவாழ் பழங்குடிக் குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்திலுள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் தலைமையிலான குழு முடிவு செய்தது.

### எண்ணத்தை வளமாக்கிய பெட்டி

இந்தத் திட்டத்தை, காஞ்சிபுரம் மாவட்டம், **கரசங்கால் துண்டல்கழனி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில்** தொடங்கி வைத்த கலைஞர் அந்த விழாவில் இவ்வாறு உரையாற்றினார்:

“சில பேர் ‘இதற்கு நிதி எங்கே? நிதி எங்கே?’ என்று கேட்டார்கள். அந்த நிதியை எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையில் தொடக்கத்திலேயே எடுத்துக் காட்டியிருக்கிறோம். இப்படி இன்றைக்குத் தொடங்கி, நாளைய தினம் வழங்க இருக்கின்ற தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 9 கோடி ரூபாய்தான். 9 கோடி ரூபாய்க்கு ஏறத்தாழ 30 ஆயிரம் பெட்டிகளை வழங்க முடிகிறது. என்றால், 750 கோடி ரூபாய்க்கு 25 இலட்சம் பெட்டிகள் வழங்க முடியும். வழங்கத்தான் போகிறோம்.

வேறிடத்திலே சில பெட்டிகள் பழைய காலத்திலே வழங்கப்பட்டதுண்டு. அந்தப் பெட்டி அல்ல நாம் வழங்குகின்ற பெட்டி. இது உலகச் செய்திகளையெல்லாம் அறிவிக்கின்ற பெட்டி. கலையை விளக்குகின்ற பெட்டி. இலக்கியத்தை விளக்குகின்ற பெட்டி. கருத்துகளை எடுத்துச் சொல்லுகின்ற பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எண்ணச் சோலையாக அமைகின்ற பெட்டி” என்றார்.

வீடுகளுக்குள் கலைஞர் வழங்கிய இலவச வண்ணத் தொலைக்காட்சிகள் வந்த பிறகு, அதைப் பயன்படுத்தும் பயனாளர்களுக்கு ‘டி.வி. இருக்கிற வீடு’ என சமூகத்தில் ஓர் அந்தஸ்து கிடைத்தது. இன்னொருவரின் வீட்டுக்குச் சென்று படம் பார்க்கத் தேவையில்லாமல் செய்து, அவர்களின் சுயமரியாதையைக் காப்பாற்றியது. செய்தி, சினிமா, கேளிக்கை நிகழ்ச்சிகள் எனப் பலவற்றையும் கண்டு களித்துத் தங்களின் பார்வையை விசாலமாக்கிக் கொண்டவர்கள் பலர். தொலைக்காட்சி மூலம் கல்வி, வேலை வாய்ப்பு, அரசுத் திட்டங்கள், பொதுச் சுகாதாரம் எனப் பல விஷயங்கள் குறித்து விழிப்புணர்வு பெற்று, அவற்றின் பின்னால் ஓடி, பலன் பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் உண்டு. இப்படி, அந்தத் தொலைக்காட்சி பெட்டியினால், கிடைத்த பலன்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

கலைஞர் வழங்கிய தொலைக்காட்சிகள் எல்லாம் இன்றும் பல வீடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதே அவரது தொலைநோக்குப் பார்வைக்கு கிடைத்த வெற்றி எனலாம்!

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, ஐந்து கட்டங்களில், மொத்தம் 3,687 கோடியே 32 இலட்சத்து 94 ஆயிரத்து 378 ரூபாய்ச் செலவில், 1 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டன. அவற்றுள், 2011 ஜனவரி 31 வரை 1 கோடியே 52 இலட்சத்து 59 ஆயிரத்து 526 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சிய தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கும் பணிகள் 2011 சட்டமன்றத் தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டு, அரசு அலுவலகங்களில் இருப்பு வைக்கப்பட்டன. ஆட்சி மாறிய பிறகு, அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை மக்களுக்கு வழங்காமல் பாழ்படுத்தப்பட்டது உலகு அறியும்.

**...வலம் வருவோம்**

## வைக்கம்: நாயக்கர் முதல் நாயகர் வரை!



தேசிய அளவில் முக்கிய நாடக ஆளுமையாக உள்ளவர் பேராசிரியர் மு.இராமசுவாமி. இவரது **‘நிஜ நாடக இயக்கம்’** மூலம் ஏற்கெனவே நிகழ்த்தப்பட்ட ‘கலகக்காரர் தோழர் பெரியார்’ என்கிற இரண்டு நாடகங்கள், பெரியார் மீது முன்வைக்கப்பட்ட அவதூறுகளுக்கு பதில் சொல்பவையாக அமைந்தவை. பெரியார் சிவப்புச் சட்டையுடன் தோன்றும் அந்த நாடகங்கள் மிகுந்த வரவேற்புப் பெற்றவையாக அமைந்தன.

தற்போது, அதன் தொடர்ச்சியாக வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில், **‘வைக்கம் என்பது நாயக்கர் கதையல்ல! ஈ.வெ.ரா நாயகர் ஆன கதை’** என்ற நாடகத்தை மதுரையில் நிகழ்த்த உள்ளார்.மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணவ-மாணவிகள் பங்கேற்புடன், வரும் 28-ஆம் தேதி, சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் இந்த நாடகம் நிகழ்த்தப்பட உள்ளது. சமூகநீதி, சமத்துவக் கொள்கைகளைக் **‘கலகக்காரர் தோழர் பெரியார் நாடகம்-3’** வழி அறிவதும், தெளிவதும் இன்னும் எளிதாகட்டும்.

## :ப்ளாஷ்பேக்



### வெள்ளி தாஜ்மஹால்!

நான் பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து கழகத்தில் இருப்பவன். 1980 ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர், ஆற்காட்டார், இன்றைய அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோரை மாவட்ட அவைத் தலைவர் என்ற முறையில் வரவேற்கும் வாய்ப்பு கிட்டியது. தலைவருக்கு வெள்ளியால் ஆன குட்டி தாஜ்மஹால் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினேன். அங்குத் திரண்டிருந்த கூட்டத்தைக் கண்டு தலைவரிடமிருந்து வாழ்த்தும் பெற்றேன்.



சுப்பிரமணி

**-ந.சுப்பிரமணி, மாவட்ட தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சாயிநாதபுரம், வேலூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அன்பகம் முற்றுகை!

**1976-ஆம் ஆண்டு ஆட்சிக் கலைப்புக்குப் பின், கலைஞரின் பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கும் கடும் நெருக்கடி இருந்தது. ஜூன் 3-ஆம் தேதி, வீட்டுக்கு வாழ்த்து கூற வந்த தொண்டர்கள் மீது தடியடி நிகழ்த்தப்பட்டது. பின்னர் ஜூலை 3, 4 ஆகிய தேதிகளில் அன்பகத்தில் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அங்கும் பல சலசலப்புகள் உருவாக்கப்பட்டன. அதைக் காரணம் காட்டி போலீஸ் அதிகாரி தேவாரம் தலைமையில், அன்பகத்தை முற்றுகையிட்ட போலீசார், 40 க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களைக் கைது செய்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 281




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131